
ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்



ஜூன் — 1981
ஆனி

நாகரத்திலும் தமிழிலும் மூலமும் பதவுரை, பொழிப்புரைகளும் விளக்க உரையும் குறிப்புகளும் உள்ளன

	ரூ.	பை
ஈச-கேன-கட உபநிஷதங்கள்	3	00
காலிகோ	5	00
ப்ரச்ன-முண்டக-மாண்டுக்ய-ஐதரேய உபநிஷதங்கள் (பக்கம் 172)	5	00
தைத்திரீய உபநிஷத்து (பக்கம் 91)	3	00
சாந்தோக்ய-ப்ருஹதாரண்யக உபநிஷத்துக்களின் ஸாரம், ப்ரஹ்மஸூத்ரத்துடன் (மூன்றுவது பதிப்பு) பக்கம் 320	6	00
காலிகோ	9	00
மஹாநாராயண உபநிஷத்து (தைத்திரீய நாராயணவல்லி) பக்கங்கள் 146	5	00
ஸ்ரீமத்பகவத்கீதை	8	00
ஸ்ரீமத் பகவத்கீதை (பாராயணம்)	4	00
ஸ்ரீமத் பகவத்கீதை மூலம் (தமிழ்) பாக்கட் சைஸ்	2	00
ஸ்ரீமத் பகவத்கீதை வெண்பா (முத்து ஐயர் இயற்றியது)	2	00
ஸ்ரீ ருத்ரம்-சமகம் (மஹாந்யாஸத் துடன்—பக்கம் 296)	6	50
காலிகோ	10	00
தைத்திரீய மந்த்ரகோசம்:—		
தமிழில் ஸ்வரத்துடன்	6	00
நாகரத்தில் ஸ்வரத்துடன் முதல்பாகம்	2	50
ஷை இரண்டாம் பாகம்	8	00
தேவி பாகவதஸாரம் முதல் பாகம்		
சாதா பைண்டு	15	00
காலிகோ பைண்டு	20	00
ஸ்ரீதேவீமாஹாத்மியம்	9	00
,, அட்டை பைண்டு	12	00
தேவீ ஸ்தோத்தரங்கள்	2	50
உபநயனம்	3	00
காலிகோ	5	00
குருகீதை	3	25
நாரத பக்தி ஸூத்திரங்கள்	1	75

	ரூ.	பை.
ஜபவிதானம்	4	00
ஸந்தியாவந்தனம் (தமிழ்)	2	00
,, காலிகோ	4	00
,, ,, (நாகரம்-தமிழ்)	4	00
தேவீஸூக்தங்களும் உபநிஷதங்களும்	1	50
புருஷஸூக்தம்	2	25
பூஜாவிதானம் (தமிழ்)	8	00
,, (நாகரம்)	4	50
காலிகோ	6	00
ஸ்ரீமத் பாகவத ஸாரம்: முதல் பாகம் (ஸ்கந்தம் 1–9) பக்கம் 560	10	00
ஷை இரண்டாம் பாகம் (ஸ்கந்தம் 10–12) பக்கம் 560	12	50
ஸௌந்தர்யலஹரி பாஷ்யம்	7	50
ஸௌந்தர்யலஹரி (மூலம்)—(நாகரம்-தமிழ்)	1	50
சிவானந்தலஹரி பாஷ்யம்	4	00
,, (மூலம்)	1	00
சிவ ஸ்தோத்திரங்கள்	1	50
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாஷ்யம்	10	00
,, ,, பாராயணம்	3	00
,, ,, மூலம்	2	00
ஸ்ரீ லலிதா த்ரிசதீ பாஷ்யம்	6	00
ஸ்ரீ லலிதா த்ரிசதீ ஸ்தோத்ரம்	1	00
ஸ்ரீவித்யா	5	00
ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம்	7	00
,, ,, ஸ்தோத்ரம் (பாராயணத்திற்குரியது)	3	00
ஸ்ரீ விஷ்ணு ஸ்தோத்ரங்கள்	1	00
பஜகோவிந்தம்	1	00
அஷ்டோத்தர சத நாமாவளிகள்	2	00
ஆதித்ய ஹ்ருதயம்	(அச்சில்)	
சித்தி விநாயக பூஜை	0	50
நவராத்திரி பூஜை	0	50

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

தொகுதி 61	ஜூன் — 1981	இதழ் 6


பொருளடக்கம்

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை

—திருமூலர்

தொகுதி 61	துர்மதி ௵ ஆனி ௴	இதழ் 6



सरस्वती महाभागे विद्ये कमललोचने ।
विद्यारूपे विशालाक्षि विद्यां देहि नमोऽस्तु ते ॥

ஸரஸ்வதி மஹாபாகே வித்யே கமலலோசனே |
வித்யாரூபே விசாலாக்ஷி வித்யாம் தேஹி நமோऽஸ்து தே ||

சரஸ்வதி தேவியே, மகாபாக்கியவதியே, வித்யாதேவியே, தாமரைக் கண்ணுடையவளே, வித்யையின் ரூபமே, விசாலமான கண்ணுடையவளே, உனக்கு நமஸ்காரம்; வித்யையைத் தந்தருள்வாயாக.

நின்னருளால் கதிஅன்றி மற்றொன்று இல்லேன்
நெடுங்காலம் பிழை செய்த நிலைகழித்தேன்;

உன்னருளுக் கினிதான நிலைஉகந்தேன்;
உன்சரணே சரண் என்னும் துணிவு பூண்டேன்

மன்னிருளாய் நின்ற நிலை எனக்குத் தீர்ந்து
வானவர்தம் வாழ்ச்சி தர வரித்தேன் உன்னை;

இன்னருளால் இனி எனக்கோர் பரம் ஏற்றாமல்
என்திருமால் அடைக்கலம் கொள் என்னை நீயே.

— வேதாந்ததேசிகர்



ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருள் வாக்கு

புதன்கிழமை, செப்டம்பர் 26, 1883

இன்று புதன்கிழமை. எனவே பக்தர்களின் வருகை குறைவாக இருந்தது. ஏனென்றால் இன்று எல்லோருக்கும் அவரவர்களுடைய வேலை இருந்துகொண்டிருக்கும். பக்தர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில்தான் குருதேவரைத் தரிசிப்பதற்குப் பெருமளவில் வருவது வழக்கம்.

ம— இன்று பிற்பகல் ஒன்றரை மணி அளவுக்குப் பள்ளிப் பணியிலிருந்து விடுபட்டு, மூன்று மணிக்கு, தட்சிணேசுவரத்துக் காளி கோயிலில் இருந்த குருதேவரின் சன்னிதானத்தை வந்தடைந்தார். இந்நாட்களில் ராக்கால், லாட்டு ஆகிய இருவரும் பெரும்பாலும் குருதேவருடனேயே வசித்து வந்தனர்.

இன்று இரண்டு மணிநேரத்திற்கு முன்புதான் கிசோரியும் தட்சிணேசுவரம் வந்தார். அறையின் உட்புறத்தில் குருதேவர் சிறிய கட்டிலின்மீது அமர்ந்திருந்தார். ம— வந்து சேர்ந்ததும் தரையில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து குருதேவருக்கு நமஸ்காரம் செய்தார். குருதேவர் ம-விடம் அவரது நலன்களை விசாரித்துத் தெரிந்துகொண்டார். பின்பு பேச்சு நரேந்திரரைப்பற்றித் திரும்பியது.

ஸ்ரீராமகிருஷ்ணர் (ம-விடம்): என்ன, நீ நரேந்திரனைப் பார்த்தாயா? (சிரித்தபடி) நரேந்திரன், 'இப்பவும்கூட இவர் காளிகோயிலுக்குப் போய் வருகிறாரே! ஆனால் எல்லாவற்றையும் நன்றாக உணர்ந்துகொண்ட பிறகு மறுபடியும் காளி கோயிலுக்குப் போகமாட்டார்!' என்று என்னைப்பற்றிச் சொல்கிறான்.

நரேந்திரன் அடிக்கடி இங்கு வருகிறான் என்று அவனது வீட்டார் அவனைப் பெரிதும் கோபித்துக்கொள்கிறார்கள். அன்றொரு நாள் நரேந்திரன் வண்டி அமர்த்திக்கொண்டு இங்கு வந்திருந்தான். வண்டி வாடகையை, சுரேந்திரர் கொடுத்தார். அதற்காக நரேந்திரனின் அத்தை சுரேந்திரருடைய வீட்டுக்கே போய்ச் சண்டை போட ஆரம்பித்துவிட்டாள்.

நரேந்திரரைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்த குருதேவர் தமது அறையின் வடகிழக்குத் தாழ்வாரத்திற்குச் சென்றார். அங்கு ஹாஸ்ரா, கிசோரி, ராக்கால் ஆகியோருடன் மற்றும் சில பக்தர்களும் அமர்ந்திருந்தார்கள். அப்போது பிற்பகல் நேரமாக இருந்தது.

ஸ்ரீராமகிருஷ்ணர் : ஆமாம், இன்று நீ எப்படி இங்கே வந்தாய்? உனக்கு இன்று பள்ளிக்கூடம் இல்லையா என்ன?

ம— : இன்று ஒன்றரை மணிக்கே பள்ளிக்கூடம் விட்டுவிட்டார்கள்.

ஸ்ரீராமகிருஷ்ணர் : ஏன் அவ்வளவு சீக்கிரம் பள்ளிக்கூடம் விட்டார்கள்?

ம— : வித்தியாசாகரர் இன்று பள்ளியைப் பார்க்க வந்திருந்தார். பள்ளிக்கூடம் வித்தியாசாகரருக்குச் சொந்தமானது. எனவே அவர் வரும் சமயங்களில் பையன்களுக்கு அரை நாள் விடுமுறை விடப்படுகிறது.

ஸ்ரீராமகிருஷ்ணர் : வித்தியாசாகரர் தாம் சொன்ன சொல்லை ஏன் காப்பாற்றுவதில்லை? 'உண்மையே பேசுவது, பெண்களைத் தாயாகவே கருதுவது ஆகிய இந்த இரண்டு பண்புகளையும் பெற்றிருப்பவர்கள் பகவானை அடையாமல்

போவார்களானுல் அப்போது துளசிதாசர் பொய் சொன்னவர் ஆவார்' என்று ஒரு வசனம் இருக்கிறது. உண்மையை வழுவாமல் கடைப் பிடிப்பவன் நிச்சயம் பகவானை அடைவான். அன்ெருரு நாள் வித்தியாசாகரர் இங்கே வருவதாகக் கூறினுர். ஆனுல் வரவேயில்லை.

பண்டிதருக்கும் சாதுவுக்கும் இடையில் பெரிதும் வேறுபாடு இருக்கிறது. வெறும் பண்டிதராக மட்டும் இருப்பவரின் மனம் காமினி காஞ்சனத்தில் பதிந்திருக்கும். சாதுவின் மனமோ ஹரியின் திருவடித்தாமரை களில் ஆழ்ந்திருக்கும். பண்டிதர் ஒன்று சொல்வார்; ஆனுல் அதற்கு மாறுகச் செய்வார். சாதுவோ சொல்லிலும் செயலிலும் ஒன்று போலவே நடந்து கொள்வார். எவருடைய உள்ளம் பகவானின் தாமரைத் திருவடிகளில் ஈடுபட்டிருக்கிறதோ, அத்தகையவருடைய சொல் செயல் சிந்தனை ஆகிய எல்லாமே அலாதி யானவை.

காசியில் நான் நானக் சம்பிரதாயத்தைச் சார்ந்த ஓர் இளம் சன்னியாசியைப் பார்த்தேன். அவருடைய வயது உன்னுடையது போன்றதுதான். என்னை அவர் 'அன்பான சாது' (பிரேமி சாது) என்று அழைத்தார். அவரது சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்களின் மடம் காசியில் இருக்கிறது. ஒரு நாள் அவர் என்னை அந்த மடத்திற்கு அழைத்துச் சென்றுர். மடத்தின் தலைவரான மஹந்துவைப் பார்த் தேன். அவர் ஒரு வீட்டின் எஜமானி அம்மாளைப் போலக் காணப்பட்டார். நான் அவரிடம், 'பகவானை அடைவதற்கு வழி என்ன?' என்று வினவினேன். அதற்கு அவர், 'கலியுகத்தில் நாரத பக்திஸூத்ரப்படி பயிலும் பக்திதான் பகவானை அடைவதற்கு உரிய வழி' என்று பதில் கூறினுர். அவர் ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தார். படித்து முடிந்ததும், 'ஜலே விஷ்ணு:, ஸ்தலே விஷ்ணு:, விஷ்ணு: பர்வதமஸ்தகே. ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்' என்று உச்சரித்தார். (நீரில் விஷ்ணு, நிலத்தில் விஷ்ணு, மலையுச்சியில் விஷ்ணு, ஜகத் முழுவதும் விஷ்ணுமயம்.) எல்லாம் முடிந்ததும் அவர் 'சாந்தி: சாந்தி: ப்ரசாந்தி:' என்றுர்.

ஒரு நாள் அவர் கீதை படித்துக்கொண்டிருந் தார். சன்னியாச தர்மத்திற்கு உரிய விதிமுறை களைப் பின்பற்றுவதில் அவர் மிகவும் கண்டிப் புடன் இருந்தார். உலகப் பற்றுக் கொண்ட ஒருவனைப் பார்த்தபடி அவனெதிரில் அவர் புனித நூல்களைப் படிக்க மாட்டார். எனவே என்னைப் பார்த்தபடிதான் அவர் கீதையைப் படித்தார். அப்போது மதுரபாபுவும் அங்கு என்னுடன் இருந்தார். மதுரபாபுவின் பக்கம் முதுகைத் திருப்பி உட்கார்ந்துகொண்டுதான் அவர் கீதை படித்தார். இந்த நானக் சம்பிர தாயத்தைச் சேர்ந்த சாதுதாம் 'உபாயமாவது நாரதர் கூறிய பக்திமுறையேயாகும்' என்று கூறியவர்.

ம— : அந்தச் சாதுக்கள் வேதாந்திகள் அல்லவா?

ஸ்ரீராமகிருஷ்ணர் : ஆம், அவர்கள் வேதாந்தி கள்தாம். ஆனுல் பக்தி மார்க்கத்தையும் அவர்கள் ஏற்றுக்கொள்பவர்கள். இந்தக் கலியுகத்தில் வேதங்களில் சொல்லியிருக்கும் விதிமுறைகள் எல்லாவற்றையும் முழு அளவில் அப்படியே பின்பற்றுவது இயலாத காரியம். ஒருவர், 'நான் காயத்ரி புரஸ்சரணம் செய்யப் போகிறேன்' என்று கூறினுர். நான் அதற்கு அவரிடம், 'அதைத் தாந்திரிக முறையில் நீங்கள் ஏன் செய்யக்கூடாது? கலியுகத்தில் அது மிகவும் நல்ல பயனைத் தரும்' என்று தெரிவித் தேன். ●

செய்தி

※ பெரணும்பட்டு, பாரதமாதா நர்சரி பள்ளி, 22—4—81 ஆம் நாள் மாலை 6 மணிக்குத் தனது ஆண்டு விழாவை விமரிசையாகக் கொண்டாடியது. சுவாமி குமாரானந்தர் சிறப்பு விருந்தினராக இருந்து ஆசியுரை வழங்கினுர். அன்று இரவு 9 மணிக்கு 'ஸ்ரீராமகிருஷ்ணர் வரலாறு' திரைப்படம் திரையிடப்பெற்றது.

உன் மதத்தைக் காக்க எழுந்து நில்!

சுவாமி விவேகானந்தர் ஐரோப்பாவில் இந்து மதத்தின் மேன்மைகளை விளக்கும் வகையில் பல அரிய சொற்பொழிவுகளை நிகழ்த்திவிட்டுக் கப்பலில் தாயகம் திரும்பினார்.

அப்போது கடற்பிரயாணத்தின்போது ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது.

கப்பல் பிரயாணிகளில் இரண்டு கிறிஸ்துவப் பிரசாரகர்கள் இருந்தனர். அவர்களுடன் சுவாமிஜி ஹிந்து மதத்தின் மேம்பாடு குறித்து விவாதம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

தர்க்கரீதியில் கிறிஸ்தவப் பிரசாரகர் இருவரும் விவேகானந்தரிடம் தோற்றுக் கொண்டே வந்தனர். இதனால் அவர்கள் ஆத்திரமடைந்து இந்துக்களையும் இந்து மதத்தையும் குறித்து வாயில் வந்தபடி வசைமாரி பாடத் தொடங்கினார்கள். சுவாமிஜி பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார். அவர்களுடைய வசை வரம்பு மீறிப் போய்க் கொண்டேயிருந்தது.

வாதத்தினால் வெல்லக்கூடியவர்களல்ல அந்த அறிவிலிகள் என்பது சுவாமிஜிக்கு நிச்சயமாகி விட்டது.

எனவே அறிவால் மட்டுமின்றி உடல் தோற்றத்தாலும் மலை என மதிக்கத் தக்க சுவாமிஜி மெல்ல நடந்து அவர்களில் ஒருவருக்கு மிகவும் சமீபமாக நின்று உறுத்துப் பார்த்தார். சட்டென்று அவரது சட்டைக் கழுத்துப் பட்டையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டார். கோபமாகச் சொல்கிறாரா விளையாட்டாகச் சொல்கிறாரா என்றே புரியாத முறையில், "மீண்டும் ஒருமுறை என் மதத்தைப் பழித்துப் பேசினாயோ அப்படியே தூக்கி இந்தக் கடலில் எறிந்துவிடுவேன், ஜாக்கிரதை!" என்றார்.

இவ்விதம் சுவாமிஜியின் குரல் கடுகடுப்புடன் இடியாக முழங்கிற்று.

மறு விநாடியே அந்த மிஷனரியின் கால்கள் பூட்ஸுக்குள் வெடவெடப்பதுகூட அவரைப் பற்றியிருந்த சுவாமிஜிக்குத் தெரிந்தது. நடுங்கிய குரலில், "என்னை விட்டுவிடுங்கள் ஐயா, இனி நான் இப்படிச் செய்யமாட்டேன்" என்று மன்றாடினார் அந்தக் கிறிஸ்தவ மதப் பிரசாரகர். மற்றொரு கிறிஸ்தவப் பிரசாரகரோ மூச்சுப் பேச்சு அற்று இருந்தார்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அவர்கள் தங்கள் பொறுப்பற்ற கண்டனத்தை நிறுத்திக் கொண்டதோடு சுவாமிஜிக்குப் பிரயாணத்தில் பல சௌகரியங்களும் செய்து கொடுத்தனர்.



இந்தச் சம்பவத்தைத் தமது சீடர் சின்ஹா என்பவரிடம் கூறிய சுவாமிஜி, "ஆருயிர் நண்பனே! சின்ஹா! யாராவது உன் தாயை அவமதித்தால் நீ என்ன செய்வாய்?" என்று கேட்டார்.

"ஏன், அவன்மீது அப்படியே தாவிப் பாய்ந்து நல்ல ஒரு பாடம் புகட்டுவேன், சுவாமிஜி!" என்றார் சின்ஹா என்ற அந்தச் சீடர்.

"நன்றாகப் பதில் சொன்னாய். அது போலவே நமது நாட்டின் உண்மையான தாயாகிய உன் சொந்த மதத்தைப்பற்றி அவ்வளவு மதிப்பு உனக்கு இருக்குமாயின், எந்த ஒரு ஹிந்து சகோதரனும் கிறிஸ்தவனாக மதம் மாற்றப் படுவதை நீ ஒருகாலும் சகிக்க மாட்டாய். இருப்பினும்கூட, தினந்தோறும் இது நடப்பதை நீ பார்க்கிறாய். பார்த்தும் பாராமுகமாகவே இருக்கிறாய். எங்கே உனது நம்பிக்கை! உன் மத உணர்வு என்ன ஆயிற்று? எங்கே உனது தேசபக்தி? கிறிஸ்தவப் பாதிரிகள் ஹிந்துக்களாகிய உங்கள் கண்ணெதிரிலேயே ஹிந்து மதத்தைத் தூற்றுகிறார்கள். அப்படி இருப்பினும் உங்களில் எத்தனை பேர்களுக்கு அந்த அநீதி சகியாமல் இரத்தம் கொதிக்கிறது? எத்தனை பேர் அதைப் பாதுகாப்பதற்காக வரிந்து கட்டி நிற்கப் போகிறீர்கள்?" என்று உணர்ச்சியுடன் கேட்டார் சுவாமி விவேகானந்தர். ●

இறைவன் திருச்சடை

கி. வா. ஜகந்நாதன்

இறைவனுடைய திருவடியைப்பற்றிப் பாடிய காரைக்காலம்மையார் இப்போது அவனுடைய திருமுடியைப் பார்க்கிருர். அவனுடைய திருக்கோலத்தைக் கண்டு கண்டு அப்பெரு மாட்டியாருக்கு அவனுடைய திருமுடியில் விழுது விட்டது போல நீண்டிருக்கும் சடா பாரத்தில் கண்கள் நிலவுகின்றன. திருவடிகள் எவ்வாறு நல்லார்க்கு நல்லனவாகவும் அல்லார்க்கு அல்லனவாகவும் இருக்கின் றனவோ, அவ்வாறே திருமுடியிலுள்ள சடைகளும் உள்ளன என்று சொல்ல வருகிருர்.

சிவபெருமானே நன்ருகத் தியானித்து அவன் திருவுருவத்தை நுட்பமாகக் கவனித்தால் அவனுடைய மின்னலைப் போல விளங்கும் சடைகள் தோன்றுகின்றன. அவன் தீவண்ணனுக இருக்கிருன். அவனுடைய ஒளிக்கு முன்னர் எந்த ஒளியும் மங்கிவிடுகிறது. கிரணங்கள் விட்டு விளங்கும் செய்ய கதிரவனுடைய பேரொளியும் அவன் திருமுன் சாய்ந்து மழுங்குகின்றது.

நேர்ந்து உணரின்
தாழ்சுடரோன் செங்கதிரும் சாயும்
தழல் வண்ணன்

ஆக அவன் தோற்றம் அளிக்கிருன். அவனுடைய வீழ்ந்து தொங்கி மின்னல் என்று உவமை சொல்லும்படி அமைந்த சடை எப்படி இருக்கிறது?

வீழ்சடையே என்று உரைக்கும் மின்.

மின்னல் ஒரு கணம் தோன்றி உடனே மறைவது. இந்த மின்னலோ அவ்வாறு மறையாமல் நின்று காட்சி தருகின்றன. பார்ப்பவர்களுடைய இயல்புக்கு ஏற்றபடி அவை தோன்றுகின்றன.

இறைவனேச் சார்ந்து வழிபட்டு அன்பு செய்பவர்களுக்கு அந்தச் சடைகள் அழகாக இருக்கின்றன. பொன் கொழுந்துவிட்டால் எப்படி இருக்குமோ அப்படி இலங்குகின்றன. இறைவன் திருமேனி பொன்வண்ணம் உடையது. ''பொன் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மேனி பொலிந்திலகும்'' என்று பொன்வண்ணத் தந்தாதி சொல்கிறது. அந்தப் பொன்வண்ணத் திருமேனி கொழுந்துவிட்டது போல இறைவன் சடைகள் தோன்றுகின்றன. நெருப்பின்



கொழுந்து மேல்நோக்கியிருக்கும். இறைவன் தழல் வண்ணன். அந்தத் தழற் பிழம்பின் கொழுந்துகள் மேலே தோன்றுகின்றன.

அவை அன்பர்களுக்குப் பொற்கொழுந்தைப் போல விளங்குகின்றன.

சார்ந்தார்க்குப் பொற்கொழுந்தே
ஒத்து இலங்கி.

பொன்னேக் கண்டவர்கள் அதைக் கைக்கொண்டு இல்லத்தே பொதிந்து வைப்பார்கள். இந்தப் பொன்னேயும் பொற்கொழுந்தையும் தரிசித்த அன்பர்கள் அவற்றைத் தம் உள்ளத்தே போற்றி வைக்கிருர்கள். பொன்னேப் படைத்தவர்கள் அதைக் கொண்டு வேண்டிய பொருள்களேயெல்லாம் பெற்றுக்கொள்ள முடியும். அப்படியே இந்தப் பொன்னேத் தம் அகத்தே கொண்டவர்களுக்கு எல்லாம் கிடைக்கும். அவர்களுக்கு ஒன்ருலும் குறைவு இராது.

பொன்னேப் படைத்தவர்களுக்கு, நாம் எது வேண்டுமானுலும் பெறலாம் என்ற பெருமிதம் இருக்கும். இறைவனென்னும் பொன்னே அகத்தில் அடக்கினவர்களுக்கும் அத்தகைய

பெருமிதம் இருக்கும். அந்தப் பெருமிதத்தைத் தான் "சிந்தையார்க்கு உள்ள செருக்கு" (79) என்று முன் ஒரு பாட்டில் சொன்னூர்.

பொன்னைப் படைத்தவர்களுக்கு இரும்பு முதலிய பிற உலோகங்கள் மதிப்புடையனவாகத் தோன்றுவதில்லை. அவ்வாறே அன்பர்களுக்கு இறைவனையன்றி மற்றவர்களிடத்தில் உள்ளம் செல்லாது. எவ்வளவு சிறந்த பதவியில் இருப்பவர்களேனும் யாவரும் இறைவனினும் தாழ்ந்தவர்களே என்ற உண்மை அவர்களுக்குப் புலனுகும். அவனைச் சிந்தையிலே வைத்து வாழ்பவர்களுக்கு, என்றும் இறவாத அந்த மெய்ப் பொருளின் முன் மற்றவையெல்லாம் மதிப்பற்றனவாக, அழிவுடையனவாகவே தோன்றும்.

ஆனல், இறைவனைச் சாராது நிற்பவர்களுக்கு இந்த அருமைப்பாடு தெரியாது. அவர்கள் இறைவனிடம் பொருந்தி உணராதவர்கள். அவனை நேர்ந்து உணர்பவர்களுக்குத்தான் இறைவனுடைய மதிப்புத் தெரியும்.

பொன்னைத் தேடி ஈட்டும் வகை தெரியாதவர்கள் இரும்பையும் தகரத்தையும் பித்தளையையும் சேர்த்து வைத்துக்கொண்டு அவற்றாலே அற்பமான திருப்தியை அடைபவர்களைப் போல, இறைவனிடம் உள்ளம் செலுத்தாதவர்கள் உலகியற் பொருள்களிலே பற்று வைத்து, அவற்றுக்காக உழைத்து, அவற்றைச் சேமித்து வைத்துப் பாதுகாப்பார்கள்.

இறைவனைச் சார்ந்து அன்பு செய்து அவனுடைய திருக்காட்சியிலே ஈடுபட்டு நிற்பவர்களுக்கு அவன் பொன்னையும், அவன் சடைகள் பொற்கொழுந்தையும் ஒத்து இலங்குவதைச் சொன்ன அம்மையார், இறைவனைச் சாராதவர்களுக்கு அவை எப்படித் தோன்றுகின்றன என்பதையும் சொல்கிறூர்.

அவனைச் சாராமல், அவன் அருமையை உணராமல் போகிறவர்களே பலர். அவர்கள் ஏதேதோ பொருளை நாடி உழன்றுகொண்டிருப்பார்கள். அவர்கள் இறைவனை நெருங்கி உணர்வதில்லை. அவ்வாறு இருப்பவர்களுக்கு அந்தச் சடைகள் தீயைப் போலத் தோன்றுமாம். தீ, கொடி விட்டது போலப் பறந்திருந்தால் எப்படியோ அப்படி அந்தச் சடைகள் காட்சி அளிக்கும்.

> சாராது பேர்ந்தார்க்குத் தீக்கொடியின்
> பெற்றியவாம்.

தீயைக் கண்டு அஞ்சி ஒதுங்குபவர்களைப் போல அவர்கள் ஒதுங்கி நிற்பார்கள். செம்பொன்னின் ஒளியைக் கண்ணை அகல விழித்துக் கண்டு, இப்படி ஒரு பொருள் நேர்பட்டதே என்று வியந்து கைக் கொள்வர்கள் அறிவுடையவர்கள். நல்ல பார்வையின்றி ஒளி குறைந்த கண்ணேடு உள்ளவர்கள் அந்தச் செம்பொன்னின் ஒளியை நன்ருகப் பார்க்க முடியாமல், அது கண்ணைக் கூசச் செய்யும் நெருப்பு என்று அஞ்சி விலகிச் சென்று ஏமாந்து போவார்கள். கண் இருந்தும் குருடர்களாகவும், பொன்னை அணுகியும் அதன் அருமையை அறியாத பேதையர்களாகவும் அவர்கள் திரிவார்கள். இறைவனைச் சாராதவர்கள் மெய்ப் பொருளை அறியும் அகக்கண் மழுங்கியவர்கள். கண்நோய் உள்ளவர்கள் ஒளியைக்கண்டு கண்ட அதை அணுகாமல் ஒளி இல்லாத இடத்தை நாடிச் செல்வது போல, அகக் கண்ணின் ஒளி படையாதவர்கள் இந்தச் செம்பொன்னை அணுகக் கூசி எங்கெங்கோ போவார்கள். அவர்கள் இறைவன் சடையைத் தீக்கொடி போலக் கண்டு விலகிச் செல்பவர்கள்.

> சார்ந்தார்க்குப் பொற்கொழுந்தே
> ஒத்து இலங்கிச் சாராது
> பேர்ந்தார்க்குத் தீக்கொடியின்
> பெற்றியவாம்;—நேர்ந்துஉணரின்
> தாழ்சுடரோன் செங்கதிரும்
> சாயும் தழல்வண்ணன்
> வீழ்சடையே என்றுரைக்கும் மின்.

பொருந்தி உணர்ந்தால் கிரணங்கள் தங்கும் சூரியனுடைய சிவந்த கதிர்களும் மழுங்கிச் சாய்வதற்குரிய தழல் போன்ற வண்ணமுடைய சிவபெருமானுடைய, தொங்கும் சடை என்று சொல்லும் மின்னல்களானவை, இறைவனை அணுகி அன்பு செய்பவர்களுக்குப் பொன்னின் கொழுந்தைப் போலத் தோன்றி, அவ்வாறு அவனைச் சாராமல் விலகிச் செல்பவர்களுக்கு நெருப்புக் கொடியின் தன்மையை உடையனவாகும்.

[சார்ந்தார் — இறைவனை இடைவிடாமல் தியானித்துச் சார்ந்த அன்பர்கள். பொற்கொழுந்து — பொற்பிழம்பின் மேற்பகுதி. சாராது பேர்ந்தார் — இறைவனை அணுகாது விலகிச் செல்பவர்கள். தீக்கொடி — நீண்டு சுடர்விடும் நெருப்பு; தீநாக்குகள். பெற்றிய— தன்மையை உடையன. நேர்ந்து-பொருந்தி; இறைவனைச் சார்வதற்குரிய தகுதியைப் பெற்று. தாழ்சுடரோன்-வானத்தில் தங்கும் கதிரவன். அவன் தழல்வண்ணனுக இருப்பினும் அவன் ஒளி கதிரவன் ஒளியையும் மங்கச் செய்கிறது. சாய்தல் — தாழ்ச்சி அடைதல். வீழ்சடை — தொங்கும் சடைகள். மின்-மின்னல்கள்; பால்பகா அஃறிணைப் பெயர்.

மின் ஒத்து இலங்கி, பெற்றிய என்று முடிக்க.]

இறைவன் திருச்சடை அன்பர்க்கு இனிதாகவும் மற்றவர்களுக்கு இன்னுததாகவும் தோன்றும் என்பது கருத்து.

இது அற்புதத் திருவந்தாதியில் அமைந்துள்ள 82-ஆவது பாட்டு.



சக்கரவர்த்தி அசோகர்

நாடோடி

சக்கரவர்த்தி அசோகரின் பிறந்த நாள் விழா நடந்துகொண்டிருந்தது. பிரதேச அதிகாரிகள் அனைவரும் அங்கே கூடியிருந்தனர்.

''பிரதேச அதிபதிகளுக்குள் மிகச் சிறந்தவருக்குப் பரிசு கொடுக்கப்படும்'' என்று அறிவிக்கப்பட்டது.

உடனே உத்தரப் பிரதேச அதிபதி எழுந்து நின்றார். ''மகாராஜா, நான் இந்த வருஷம் வழக்கத்தைவிட மூன்று பங்கு வரி மக்களிடமிருந்து வசூலித்திருக்கிறேன்'' என்றார்.

பிறகு தென் பிரதேசத்தின் அதிபதி எழுந்து நின்றார். ''மகாராஜா! வழக்கத்தைவிட இரண்டு மடங்கு பணம் நான் அரசாங்கக் கஜானாவில் சேர்த்துள்ளேன்'' என்றார்.

கிழக்குப் பிரதேசத்தின் அதிபதி எழுந்து நின்றார். ''நாட்டுக்கு எதிராகக் கிளம்பிய அநேகரை நான் அடக்கிச் சிறையிலிட்டிருக்கிறேன்'' என்றார்.

மேற்குப் பிரதேசத்தின் அதிபதி எழுந்து நின்றார். ''நான் இந்த வருஷம் புதுப் புது வரிகள் போட்டு வசூலை அதிகரித்திருக்கிறேன். அதே சமயம் அரசுச் சிப்பந்திகளின் சம்பளத்தையும் குறைத்துள்ளேன். அதனால் அரசாங்கத்துக்கு முன்னைவிட அதிகப் பணம் கிடைத்திருக்கிறது'' என்றார்.

கடைசியில் மகத தேசாதிபதி எழுந்தார். ''மகாராஜா! என்னை மன்னிக்க வேண்டும். போன வருஷம் சேர்த்த பணத்தில் கால் பங்குகூட நான் இந்த வருஷம் கஜானாவில் சேர்க்க முடியவில்லை. மக்கள் விளைச்சல் இல்லாமல் கஷ்டப்பட்டதனால் நான் வரியே வசூலிக்கவில்லை. அத்துடன் பள்ளிகள், தர்மசாலைகள், குளங்கள் முதலியன கட்டுவதில் இந்த வருஷம் அதிகம் செலவழித்துவிட்டேன். சிப்பந்திகளின் சம்பளத்தை வேறு அதிகரித்தேன்'' என்றார்.

அசோக சக்கரவர்த்தி தம் சிம்மாசனத்திலிருந்து எழுந்து நின்றார். ''இந்த வருஷச் சிறந்த அதிபதி மகத தேசாதிபதி என்பதில் சந்தேகமில்லை. இந்த வருஷப் பரிசு அவருக்குச் செல்கிறது. மக்களைக் கஷ்டப்படுத்தி வரி வாங்குவதை நான்

ரா. வி. 2 ஜூன்--81

விரும்பவில்லை. அரசாங்கத்துக்கு எதிராக இருக்கிறார்கள் என்பதற்காக மக்களைச் சிறையில் அடைக்கும் வழக்கத்தையும் நான் விரும்பவில்லை. மக்களுக்கு உங்களால் எவ்வளவு உதவ முடியுமோ அவ்வளவு உதவ வேண்டும் என்று நான் விரும்புகிறேன்'' என்றார்.

சபரி

ராமர் வனவாசத்தின்போது, சபரியைச் சந்தித்தார். சபரி அந்த ஆசிரமத்தைச் சுற்றியுள்ள அழகிய காட்சிகளை ராமருக்குக் காட்டினாள். ஒரு வயலில் வாடாத மலர்களையும், அதே சமயம் மணமுள்ள மலர்கள் பூத்திருப்பதையும் கண்டு ராமர் அதிசயித்தார்.

"இத்தனை விசித்திரமான பூக்கள் இங்கு எப்படித் தோன்றின?'' என்று அவர் சபரியைக் கேட்டார்.

அதற்குச் சபரி சொன்னாள்:

"இது மதங்க முனிவரின் ஆசிரமம் என்பது தங்களுக்குத் தெரியும். நான் அவருக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தேன். ஒரு சமயம் ஆசிரமத்தில் விறகே இல்லை. மழைக்காலம் நெருங்கிக்கொண்டிருந்தது. ஆசிரமத்தில் சிஷ்யர்களும் விருந்தினர்களும் இருந்தும் யாரும் விறகை வெட்டி எடுத்து வர முன்வரவில்லை.

"ஆகவே மதங்க முனிவர் தம் தள்ளாத வயதையும் பொருட்படுத்தாமல் கோடரியைத் தூக்கித் தோள்மேல் வைத்துக்கொண்டு விறகு வெட்டக் கிளம்பினார். இதைக் கண்ட சிஷ்யர்களும் மற்றவர்களும் ஆளுக்கொரு கோடரியை எடுத்துக்கொண்டு அவர் பின்னாலேயே சென்றனர். மாலை வரை விறகுகளை வெட்டிக் கட்டி எடுத்துக்கொண்டு ஆசிரமத்திற்குத் திரும்பினர்.

"அடுத்த நாள் காலை விழித்தெழுந்தால் எங்கும் நறுமணம் வீசிற்று. திடீரென்று இப்படி நறுமணம் வீசுவதற்குக் காரணம் என்னவென்று பார்த்தால் பக்கத்திலுள்ள வயலில் திடீரென்று பூத்திருந்த மலர்களிலிருந்துதான் அந்த நறுமணம் வீசியது என்று தெரிந்தது. அந்த மலர்கள் எப்படி வந்தன என்று ஆராய்ந்தபோது முதல் நாள் மாலை விறகு வெட்டியவர்களின் நெற்றிவேர்வை எங்கெல்லாம் நிலத்தில் விழுந்ததோ அங்கெல்லாம் இந்த நறுமணம் வீசும் மலர்கள் தோன்றியுள்ளன என்று தெரிந்தது.''

சபரி சொன்னதைக் கேட்டதும், "உடலுழைப்பின் பெருமையே பெருமை'' என்றார் ராமர்.

காசி க்ஷேத்திரம்

திருமுருக கிருபானந்த வாரியார்

காசியின் பெருமை எண்ணுக்கும் எழுத்துக்கும் சொல்லுக்கும் அடங்காதது.

காசி விசுவநாதர் கோயிலுக்கு அருகிலுள்ள ஞானவாபிக்கு மேற்கில் முக்தி மண்டபம் அமைந்திருக்கிறது. இதில் இருந்து திருவைந்தெழுத்தை ஜபித்தால் எண்ணில்லாத பலன்கள் உண்டாகும். சித்திகளும் உண்டாகும்.

விசுவநாதர் ஆலயத்துக்கு அருகில் அன்னபூரணி அம்மை ஆலயம் இருக்கிறது. அம்பிகையின் திருவுருவம் மிகவும் அழகியது. மேற்கு நோக்கிய சந்நிதி. சுற்றுப் பிராகாரத்தில் பலர் இருந்து சதா பாராயணம் செய்துகொண்டிருக்கிறார்கள். மற்றும் பிராகாரத்தில் பற்பல மூர்த்திகளின் திருவுருவங்கள் காணப்படுகின்றன. விசுவநாதர் கோயிலுக்கும் அன்னபூரணி ஆலயத்துக்கும் இடையே அட்சயவடம் (ஆலமரம்) என்பதையும் அவசியம் தரிசிக்க வேண்டும்.

அன்னபூரணி ஆலயத்திற்கு அருகில் துண்டிராஜ விநாயகர் ஆலயம் தெற்கு நோக்கிச் சிறியதாக அமைந்துள்ளது. செந்தூர நிறமுடைய திருவுருவம்; வரதமான மூர்த்தி.

துண்டி விநாயகர் ஆலயத்துக்கு அருகில் கிழக்கு முகமாக உள்ள ஆலயம் சாட்சி விநாயகருடையது. மூர்த்தி பெரிதாகவும் அழகாகவும் விளங்குகிறது.

விசுவநாதர் ஆலயத்துக்குக் கிழக்கே ஒரு பர்லாங்கு தூரத்தில் விசாலாட்சியம்மை கோயில் வடக்கு நோக்கி இருக்கிறது. நகர தனவணிகர்கள் இந்தக் கோயிலைப் புதுப்பித்துள்ளார்கள். விசாலாட்சியம்மையின் திருவுருவம் சிறியதாக இருக்கிறது. உற்சவமூர்த்தி மிகவும் அழகியது. மதவெறி மிக்க வேற்றரசர்களின் ஆட்சி நிகழ்ந்த காலத்தில் அச்சத்தினால் மூர்த்திகளை ஆங்காங்கு அஞ்ஞாதவாசம் போல் ஒளித்தும் மறைத்தும் வைத்து வழிபட்டதனால் ஆங்காங்கே உள்ள சிறந்த மூர்த்திகளின் கோயில்கள் தென்னாட்டில் உள்ளவாறு விசாலமின்றிச் சுருங்கிய இடத்தில் அமைந்திருக்கின்றன.

விசுவநாதர் திருக்கோயிலுக்கு வடக்கே உள்ள கோயில்களைத் தரிசிப்பது 'உத்தர யாத்திரை'யாகும்.

விசுவநாதர் கோயிலுக்கு வடக்கே கங்கைக் கரையில் மணிகர்ணிகை என்ற தீர்த்தக் கரையில் மணிகர்ணிகேச்வரர் கோயிலும், துர்க்கை



ஆலயமும் இருக்கின்றன. இந்தத் துர்க்காதேவி கோயிலின் நான்கு திசைகளிலும் நான்கு சிறு சிவாலயங்கள் இருக்கின்றன.

இதற்கு அருகில் தாரகேச்வரர் கோயில். காசியில் மாண்டவர் காதில் சிவபெருமான் தாரக மந்திரத்தை உபதேசிக்கிறார். அந்தப் பரம்பொருளுடைய கோயில் இது.

காசியின் வடகிழக்கே ஆறு கல் தொலைவில் சாரநாதம் இருக்கிறது. இங்கே கௌதம புத்தர் இருந்து தவம் செய்து பலருக்கு உபதேசித்துத் தமது மதத்தைப் பரப்பினர். பழமையான சின்னங்கள் பல இங்கு உள்ளன. இவை சரித்திரக் கண் கொண்டு பார்க்கத் தக்கவை.

இங்கிருந்து பத்துக் கல் தொலைவில் மார்க்கண்டேயம் என்ற சிவாலயம் விளங்குகிறது.

விசுவநாதர் கோயிலுக்கு வடக்கே கங்கைக் கரையில் நேபாள மன்னர் லலிதா கட்டத்தில்

நிறுவிய பசுபதீச்வரர் கோயில்; அதற்கு அருகிலுள்ள சாதுக்கள் மடத்தில் ராஜராஜேச்வரி; அங்குள்ள பஞ்சமுகலிங்கம்; அங்கிருந்து சிறிது தூரத்தில் ராமகட்டத்தில் சிம்ம வாகனத்தில் சங்கடாதேவி; அதற்கு அருகில் நிலகண்ட மகாதேவர்; தண்டபாணி; காலபைரவர்; பிந்து மாதவர்; வந்தேகாசி; மிருத்யுஞ்ஜயநாதர்; அதன் அருகிலுள்ள ஞானகூடம் ஆகியவற்றை அவசியம் தரிசிக்க வேண்டும்.

வடமேற்கில் நாககுண்ட தீர்த்தம் உள்ளது. அதன் நீர் சகல விஷங்களையும் நீக்கும் வன்மையுடையது. அரிச்சந்திரனுடைய புதல்வன் லோகிதாஸனை இங்கேதான் அரவம் தீண்டியது. அதனால் இந்தத் தீர்த்தத்தில் முழுகுவோர்க்கு விஷபயம் ஏற்படாது. இது இன்றும் கண்கூடு.

விசுவநாதர் கோயிலுக்குத் தெற்கே உள்ள கோயில்களை வணங்குவது தட்சிண யாத்திரையாகும். விசுவநாதர் கோயிலுக்குத் தெற்கே சுமார் ஒரு கல் தொலைவில் திலபாண்டேச்வரர் என்ற மூர்த்தியும் உண்டு. பெரிய சிவலிங்கம். திலம்-எள். அது நாள்தோறும் எள்ளத்தனை வளர்வதனால் இந்தப் பேர் உண்டாகியது என்கிறார்கள். கோயிலுக்குள் பாதாளேச்சுரர் என்ற லிங்கமும் மிக்க பள்ளத்தில் உள்ளது. அங்கேயே ஐயப்பன் ஆலயமும் உள்ளது.

இங்கிருந்து சிறிது தூரத்தில் சிந்தாமணி விநாயகர் கோயில் உள்ளது. மூர்த்தி அழகாக அமைந்துள்ளது. கங்கைக்குக் கிழக்காகப் புதியதாக வியாசர் இயற்றிய நகருக்கு இவர் இடர் விளைவித்தவர்.

கங்கைக் கரையில் கேதாரக் கட்டத்தின் அருகிலுள்ள கேதாரநாதர் கோயில் மிகவும் அழகானது. தென்னாட்டுக் கோயில் போல் இது அமைந்துள்ளது. சுவாமி சுயம்பு; காசி மடத்துத் தலைவர்களுடைய கோயில். வழிபாடுகள் அனைத்தும் நன்றாக நடைபெற்று வருகின்றன. ஆதி குமரகுருபரர் திருமடம் இதன் அருகில் உள்ளது. இந்த மடத்தில் மார்கழி மாதம் முப்பது நாட்களிலும், மாசி மாதம் முப்பது நாட்களிலும் ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கும் அடியவர்களுக்கும் அன்னதானம் செய்கின்றனர். தமிழ்மறை ஓதி, சௌராதி சண்டாந்த மாகப் பூஜை நடக்கிறது. உற்சவ மூர்த்திகளும் இங்கு உள்ளன. பல விழாக்களும் நடைபெறுகின்றன.

விசாலாட்சி கட்டத்திற்கு அருகில் ஒரு சிறு சந்தில் வராகியம்மை கோயில் உள்ளது. இதில் விடியற்காலை 4மணி முதல் 6மணி வரை பூசை நடைபெறுகிறது. பொழுது விடிவதற்குள் பூட்டிவிடுகிறார்கள். பிறகு மறுநாள் விடியற்காலையில்தான் பூசை. விடியற்காலை நீராடி மிக்க தூய்மையுடன் சென்று தரிசிக்க வேண்டும். மூர்த்திகரம் மிக்க இடம்.

சுமார் 1½ கல் தொலைவில் துர்க்காதேவி ஆலயம் இருக்கிறது. வரமளிக்கும் தேவி· கோயிலுக்கு அருகில் திருக்குளமும் உண்டு.

துர்க்காதேவி கோயிலுக்கு அருகில் கௌடியம்மை கோயில் உள்ளது. சிறு கோயில்; இங்கே செல்வோர் கௌடி (பலகறை) வாங்கி அம்பிகைக்கு முன் போட்டு, "காசிக்கு வந்த பலன் எனக்கு; கௌடி உனக்கு" என்று கூறி வணங்குகிறார்கள்.

இந்தத் தேவி ஒரு காலத்தில் கண்ணுதற் கடவுளைக் குறித்துக் கடுந்தவம் புரிந்தாள். சிவபெருமான் அவள்முன் தோன்றி, "என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார். அவள், "சுவாமி! காசியில் வந்து தேவரீரைச் சேவித்தோர் அடையும் நற்பயன் அனைத்தும் எனக்கு வர வேண்டும்" என்று கேட்டாள். இறைவன், "அது முறையன்று. காசிக்கு வந்தோர் உன்னைக் காணாது போவாராயின் அவர்களுடைய புண்ணியம் உனக்கு வரட்டும். கௌடி (சோழி) வாங்கி உன்னைச் சேவித்தோர் காசி யாத்திரை மேற்கொண்டதன் முழுப் பயனையும் பெறுவராக" என்று வரமளித்தார். ☆

இரண்டு விதச் சுதந்திரங்கள் இருக்கின்றன. ஒருவன் விரும்பியதைச் செய்ய அனுமதிக்கும் சுதந்திரம் ஒரு வகை; செய்ய வேண்டியவற்றைச் செய்ய அனுமதிக்கும் சுதந்திரம் இரண்டாவது வகை.

—சார்லஸ் கிங்ஸ்லி

ராமாயணத்தில் சரணுகதி

அலங்காரம் தேவராஜன்

இம்மை மறுமை இன்பங்களை எளிதில் உதவும் ராமபிரான் தானே சரணுகதிபண்ணிக் காட்டு கிருன்.

கடலில் அணைகட்டக் கடலரசனிடம் ராமன் சரணுகதி செய்கிருன். சமுத்திரராசன் முகம் காட்டவில்லை. தாசரதியின் உள்ளம் தணலாகி விடுகிறது. கோபம் மீதூர, "லட்சுமணு! வில்லை எடு. ஒரே அம்பினுல் இந்தக் கடல் நீரையே வற்ற வைத்துவிடுகிறேன்" என்ருன்.

இலக்குவனும் வில்லைக் கொடுத்தான். வாங்கிய வில்லை வளைத்தான். அம்பையும் தொடுத்துவிட்டான்.

அம்புக்கு அஞ்சி ஓடி வந்தான் சமுத்திர ராசன். ராமன் அடிக்கமலத்தில் வீழ்ந்தான். பகவானின் கோபம் உடனே பறந்தோடி விட்டது. உள்ளம் கனிய, "அரசே! உனக்கு விரோதி யார்? சொல், அவரிடத்தில் இந்த அம்பை ஏவி அவர்களைத் தொலைத்துவிடு கிறேன்" என்கிருன்.

சரணுகதனை ஸர்வேச்வரன் சரணுகதி செய்யலாமா? ஸர்வாந்தர்யாமியான அவன் யாரை நோக்கிச் சரணுகதி செய்வது? இது தலைகீழாகத் தடுமாறியதனுல் பெருமானின் சரணுகதி பலிக்கவில்லை.


விபீஷண சரணுகதி

விபீஷணன் ராவணன் தம்பி; தர்மம் தெரிந் தவன். 'சீதை ராமனின் தர்மபத்தினி, அவளை இச்சிப்பது பாவம். ராமனிடம் அவளைச் சேர்த்துவிடு' என்று தமையனுக்கு அவன் உபதேசிக்கிருன்.

ராவணன் துஷ்டன். அவனுக்கு விபீஷணன் செய்யும் உபதேசம் ஏறவில்லை. "குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பு நீ. என்னை விட்டுச் சென்றுவிடு" என்று விபீஷணனைப் புறக்கணிக்கிருன்.

ராவணனது கடுஞ்சொல் கேட்டவுடனே, கையில் பிடித்த கதையுடன் இலங்கையின் மண்ணைக்கூட மிதியாமல் மந்திரிகள் நால் வருடன் ஆகாயத்தில் கிளம்பிவிட்டான் விபீஷணன். நேராக ராமன் இருக்குமிடம் தேடி வருகிருன். ஆகாயத்தில் நின்றவாறே ராமனைச் சரணம் புகுகிருன்.

"ஏ ராகவா! நான் ராவணன் தம்பி விபீஷணன். என் தமையனுக்கு நான் எவ் வளவோ தர்மங்களை எடுத்துச் சொல்லியும்



அவன் கேட்கவில்லை. கடும் சொற்களால் என்னைத் தாக்கினுன். சிறுவனுகிய இந்திர ஜித்தைக் கொண்டும் என்னை அவமானமடையச் செய்தான். அதனுல் நான் என் மனைவி மக்களை எல்லாம் விட்டு, ராகவா! உன்னைச் சரணமடை கிறேன்" என்று கூறியதோடல்லாமல், வானரர் களை நோக்கி, "ராமபிரானின் கடாட்சம் பெற்ற வர்கள் நீங்கள். சர்வலோக சரண்யனுகிய ராகவனுக்கு என்னைப்பற்றி விரைவில் அறி வியுங்கள்" என்று பிரார்த்திக்கிருன்.

இந்த வார்த்தை சுக்கிரீவன் காதில் விழு கிறது. அவன் விபீஷணனைச் சந்திக்கிருன். 'முன்பு மாரீசன் மான் உருக்கொண்டு வஞ்சித் தான். சந்நியாசியாகி வந்து ராவணன் வஞ்சித் தான். அவர்களைப் போல் விபீஷணனும் சரணுகத வேடத்தோடு வருகிருன். இவன் எதிரி. நம் படையில் புகுந்து குழப்பம் செய்து விடுவான்' என்று எண்ணி ராமனிடம் ஓடுகிருன். "பிரபோ! இவன் நம்மை மித்திரபேதம் செய்ய வந்திருக்கிருன். இவனை வதைப்பதற்கு அனு

மதி வேண்டும். இவனை அங்கிகரிக்கக் கூடாது'' என்று கூறுகிறான்.

சுக்கிரீவன் வார்த்தையைக் கேட்ட ராகவன், உடனே ஒரு மந்திராலோசனைச் சபையைக் கூட்டுகிறான். அங்குள்ள அறிஞர் பலரும் விபீஷணனை அகற்றவே சொல்கிறார்கள். இவர்கள் பேச்சு ராமனது எண்ணத்துக்கு விரோதமாக இருக்கிறது. கடைசியாக ராமன் அனுமனைக் கேட்கிறான்.

''பிரபோ! விபீஷணன் தர்மாத்மா. நான் இலங்கை சென்றிருந்தபோது 'தூத வதம் கூடாது' என்று ராவணனது சபையில் வாதிட்டவன்; ஆகவே இவனைச் சேர்த்துக் கொள்ளலாம்'' எனக் கூறுகிறார் மாருதி.

அனுமனின் இந்த வார்த்தையைக் கேட்ட பின்புதான் ராமன் முகம் மலர்ந்தது. சரணமடைந்தவனைக் கைவிட ராமனால் முடியுமா? சரணாகதி தர்மத்தை நிலைநாட்டவே அவன் பிறந்திருக்கிறானே? அனுமனுக்கு முன் பேசியவர்களின் கருத்துக்களினால் ராமன் உள்ளம் கலங்கியிருந்தது. அனுமன் சொல்லைக் கேட்டவுடனே அவன் உள்ளம் தெளிந்தது.

அதன் பின் ராமனும் தன் கருத்தைக் கூறுகிறான்.

''ஒருவன் நேசன் போன்று வேஷம் போட்டு நடித்தாலும், அவனால் என் உயிருக்கே தீங்கு நேரிட்டாலும், நான் அவனைக் கைவிட முடியாது. அவனிடத்திலுள்ள குற்றங்களை நீங்கள் கூறினீர்கள். தோஷமுள்ளவனை ஏற்றுக் கொண்டால்தானே எனக்குப் பெருமை? தோஷமற்றவனை அங்கிகரிப்பதில் எனக்குப் பெருமை ஏது?'' என்கிறான் ராமன்.

சுக்கிரீவனுக்கு விபீஷணனைச் சேர்க்க விருப்பமில்லை. திரும்பவும் ராமனை நோக்கி, ''ராகவா! இவன் நல்லவனாக இருந்தாலும் சரி, துஷ்டனாக இருந்தாலும் சரி, இவனால் நமக்கு ஆக வேண்டியது ஒன்றுமில்லை. ஆபத்துக்காலத்தில் தன் தமையனைக் கைவிட்டு வந்தவன் நம்மையும் கைவிட மாட்டான் என்பது என்ன உறுதி? ஆகையால் இவன் நமக்கு வேண்டியதே இல்லை'' என்று கூறி, ராமன் கூற்றை மறுக்கிறான். சுக்கிரீவன் தன்னிடம் கொண்டுள்ள அன்பைக் கண்டு வியந்து ராமன் கூறுகிறான்—

''சுக்கிரீவா! வலியக் கிடைத்த சாம்ராஜ்யத்தை உதறித் தள்ளிய பரதனைப் போன்ற தம்பியைக் காண்பது அரிது; அதே போல, முதல் நாள் நாட்டைக் கொடுத்து மறுநாள் காட்டுக்குப் போ என்று கூறும் தகப்பன் சொற்படி நடக்கும் என்னைப் போன்ற ஒரு தனயனைக் காண முடியாது, 'மகனைப் பிரிந்தான், மரணமடைந்தான்' என்று கூறக்கூடிய தசரதனைப் போன்ற ஒரு தகப்பனையும் பார்க்க முடியாது. சரணமடைந்தவரையும் சந்தேகமுறும் உள்ளக் கலக்கமுள்ள உன்னைப் போன்ற தூய நண்பனையும் இவ்வுலகில் காண்பது அரிது'' என்று கூறிய ராமன் மேலும் தன் சக்தியை அவனுக்கு நினைவுறுத்துகிறான்.

''வானரர் தலைவ! ஒரே அம்பினால் வாலியைக் கொன்று உனக்கு முடிசூட்டியதை அதற்குள் மறந்துவிட்டாயா? என் வீரத்தில் இன்னுமா உனக்குச் சந்தேகம்? விபீஷணன் நல்லவனோ கெட்டவனோ அவனால் சிறிதும் எனக்குத் தீமை செய்ய முடியாது. இவ்வுலகத்திலுள்ள பிசாசர், அசுரர், யட்சர், அரக்கர் இவர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து என்னை எதிர்த்தாலும் நான் நினைத்தால் என் விரல்நுனியினால் அவர்கள் அனைவரையும் அழித்துவிடுவேன். ஆனால் சரணமடைந்தவனைக் கைவிட எனக்குச் சக்தியே கிடையாது'' என்று தன் முடிவை அறிவிக்கிறான்.

''தகுதியற்ற ஒருவன் என்னை ஒருமுறை சரணமடைந்தால் உடனே அவனை எல்லாப் பிராணிகளிடத்திலிருந்தும் பயத்தை நீக்கிக் காப்பேன். அவன் என்னிடம், 'ராமா! இந்த ஆத்மா உன் சொத்து' என்று ஒரு முறை சொன்னாலும் போதும், அவன் அஞ்ச வேண்டாம். நான் அவனது விரோதிகளை எல்லாம் களைந்து விடுவேன். அவன் என்னை விட்டு நழுவினாலும் நான் அவனை விடமாட்டேன், காத்தே தீருவேன். இது என் உறுதியான பிரதிக்ஞை'' என்கிறான் ராமன். ''சரணமடைகிறவன் எல்லாத் தர்மங்களையும் விட்டு என் ஒருவனையே சரணமாகக் கொள்ள வேண்டும். அப்படிச்

சரணமடைந்தவனை எல்லாப் பாவங்களிலிருந்தும் நான் விடுவிக்கிறேன்'' என்கிறுன் கண்ணன்.

''எதையும் விட வேண்டியதில்லை; ஒரு முறை 'ராமா! நான் உன்னுடையவன்' என்றால் போதும்; அவனை நான் விடேன்'' என்கிறுன் ராமன்.

அது மட்டுமா? விபீஷணனை, ''நீ என் தம்பி இல்லை, போ'' என்றுன் ராவணன். ''உன்னேடு எழுவராஞேம், நீ வா'' என்று விபீஷணனைத் தன் தம்பியருள் ஒருவனுகவே ஏற்கிறுன் ராமன்.

''கவிக்குலத்தரசே! விபீஷணனுக்கு நான் அடைக்கலம் அளிக்கிறேன். வந்தவன் விபீஷணனுனுலும், அல்லது ராவணனேயானுலும் அழைத்து வா'' என்று கூறி, விபீஷணனுக்கு அபயமளிக்கிறுன் ராமன்.

ராமாயணத்தில் விபீஷண சரணுகதியே அபயப் பிரதான சாரம் என்பர் ஆன்ருேர். இதில் அநேக தத்துவங்கள் அடங்கிக் கிடக்கின்றன.

[முற்றும்]

செய்திகள்

※ மதுரை, நாராயணபுரத்திலுள்ள 'ஸ்ரீராமகிருஷ்ண நினைவு ஆய்வு நிலையமும், மருத்துவ நிலையமும்' என்ற அமைப்பின் சார்பாக 25-4-81-ஆம் நாள் சனிக்கிழமை மாலை 4-30 முதல் 6-30 மணி வரை சத்சங்க நிகழ்ச்சி நடைபெற்றது. சத்சங்க நிகழ்ச்சியில் கலந்துகொண்ட சுவாமி கமலாத்மானந்தர் 'பாரத நாட்டின் பண்பாடு' குறித்து ஸ்ரீராமகிருஷ்ண நினைவு நிலையத்தில் உரையாற்றினுர்.

※ மதுரை, மீனுட்சியம்மன் கோவிலில் திருவள்ளுவர் கழகத்தில் 25-4-81-ஆம் தேதி இரவு 7 மணி முதல் 9-30 வரை டாக்டர் எஸ். சண்முகம் F. R. I. E. S. அவர்களின் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் 'ஸ்ரீராமகிருஷ்ண — விவேகானந்த இயக்கம்' என்ற தலைப்பில் சுவாமி கமலாத்மானந்தர் உரை நிகழ்த்தினுர்.

※ அரக்கோணம், ஸ்ரீராமகிருஷ்ண—விவேகானந்த மன்றத்தின் சார்பாக ராமர் கோவிலில் ஏப்ரல் 26 ஞாயிறன்று காலை 9 மணி முதல் 11 மணி வரை சுவாமி விபுதானந்தரின் ஆன்மிகச் சொற்பொழிவு நடைபெற்றது.

※ விருதுநகரில் ஹிந்து முன்னணியினர் 26-4-81 காலை 10 மணிக்கும், மாலை 3 மணிக்கும் ஏற்பாடு செய்திருந்த இரண்டு கூட்டங்களில் சுவாமி கமலாத்மானந்தர் கலந்துகொண்டு ஹிந்துக்களிடையே ஒற்றுமை நிலவ வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திப் பேசினுர்.

※ விருதுநகர், சக்தி சங்கத்தில் 26-4-81 மாலை 6 . மணி முதல் இரவு 7-15 வரை 'ஸ்ரீசாரதாதேவியாரின் வாழ்வும் வாக்கும்' என்ற தலைப்பில் சுவாமி கமலாத்மானந்தர் சொற்பொழிவு நிகழ்த்தினுர்.

※ விருதுநகரில், ஹிந்து முன்னணியின் சார்பாக 26-4-81 ஞாயிறன்று பராசக்தி வெயிலுகந்தம்மன் கோவிலில் இரவு 7-45 மணிக்குப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட சுவாமி கமலாத்மானந்தர் 'ஹிந்து மறுமலர்ச்சிக்கு விவேகானந்தர் அளித்த செய்தி' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினுர்.

சுவாமி பிரேமானந்தரின் போதனைகள்

ஸ்ரீராமகிருஷ்ணர் பல்வேறு மதங்களில் விதித்துள்ள சாதனைகளைப் பழகி அவற்றுள் ஒவ்வொன்றின் மூலமாகவும் தெய்விக அனுபவத்தைப் பெற்றார். அவர் கடவுளை எல்லா உயிர்களிலும் கண்டார். அவருக்குப் பகை எங்கும் ஏதுமில்லை. அநேகமாக எக்காலத்தும் அவர் பக்தியின் போதை ஏறியவராக இருந்ததை நாங்கள் கண்டுள்ளோம். அவரை மையமாகக் கொண்டு தனியொரு மதக் குழு ஏற்படுத்துவது அவருக்கு வெறுக்கத்தக்கதாக இருந்தது.

எல்லா மதங்களையும் ஆழம் கண்டவரும், அன்பே உருவாகியவரும், ஆத்மஞானியும், அவதார புருஷருமான ஸ்ரீராமகிருஷ்ணரைச் சுற்றி எங்ஙனம் வேலிபோட இயலும்?

ஒரு மதத்தைப் பின்பற்றுபவர்களிடம் அச்சமும் பொறாமையும் பலவீனமும் தோன்றி அந்த மதம் சீர்கெடும்போதுதான் பிளவுகள் ஏற்படும்.

அசையாமலிருக்கும் குளத்தின் நீர் தூய்மை யிழப்பது போல, ஓடும் ஆற்றின் நீர் தூய்மை இழப்பதில்லை.

உன்னை மதப்பித்துப் பிடிக்காமல் பார்த்துக் கொள். எவருடைய நன்னம்பிக்கையையும் கலைக்கலாகாது. "நாங்கள் ராமகிருஷ்ணர் மதத்தைச் சேர்ந்தவர்கள். அவர் ஒருவர்தாம் உலக ரட்சகர். அவர்தாம் அவதாரங்களில் சிறந்தவர். ஆகையால் எல்லோரும் அவரைத் தான் தொழ வேண்டும்'' என்றெல்லாம் ஒரு பொழுதும் கூறலாகாது.

ஸ்ரீராமகிருஷ்ணரிடம் அகங்கார எண்ணம் சிறிதும் இருக்கவில்லை. தம்மை இயக்குவிக்கும் உரிமை முழுவதையும் அவர் அன்னை பராசக்தியிடம் ஒப்படைத்துவிட்டார். உலக விவகாரங்களில் ஒருவர், நம்பிக்கையுள்ள மற்றொருவருக்கு அந்தமாதிரி உரிமையை அளிப்பதுண்டு. அது Power of Attorney என்று ஆங்கிலத்தில் கூறப்படும். அது போன்ற உரிமையை, கிரீஷ் கோஷ் ஸ்ரீராமகிருஷ்ணருக்குக் கொடுத்தார். அவ்வாறு ஒருவன் தன்னை முழுவதும் பிறரிடம் ஒப்படைத்துவிடுவது வெகு கடினம்; அகங்காரம் சிறிதளவேனும் இருக்கும்வரை அது இயலாதென்றே கூறலாம். அந்த நிலை காற்றில் அலையும் சருகுக்கு ஒப்பானது என்று ராமகிருஷ்ணர் கூறுவார்.

இன்பத்தில் மகிழ்ச்சி பொங்காமலும் துன்பத்தில் வருத்தத்தில் ஆழாமலும், மனதை ஆண்டவனிடம் நிறுத்தி அவன் கையில் கருவி போல் வாழ்பவன்தான் ஸ்ரீகிருஷ்ண பகவான் கீதையில் உபதேசித்தபடி வாழ்பவனாவான். 'எல்லாக் கடமைகளையும் என்னிடம் அர்ப்பணம் செய்து என்னைச் சரணடைவாயாக' என்று அவர் கூறினார். 'அதன் பின் உனக்கு அஞ்ச வேண்டியது ஏதுமில்லை. எல்லாப் பாவங்களினின்றும் நான் உன்னை விடுவிப்பேன்' என்று அவர் கூறியது பொய்யாகாமல் அவர் காப்பார்.

கடவுளின் கருணையை நாடி அடை. மற்றதெல்லாம் வீண். 'வேதங்களைக் கற்றதனாலோ, நுண்ணறிவினாலோ, விரிந்த கேள்வியினாலோ இந்த ஆத்மா ஒரு சாதகனால் அடையப்படுவதன்று. ஆத்மா ஒன்றையே எப்பொழுது ஒருவன் நாடுகிறானோ அப்பொழுது அவனால் அது அடையப்படுகிறது.' பரமாத்மாவின் கருணைக்கு அவன் பாத்திரமாகும்போது அளவு கடந்த அறிவு அவனிடம் எழுகிறது. அதன்பின் அவன் மதநூல்களைப் படிக்க வேண்டிய அவசியமில்லை.

நேரான அனுபவ ஞானம் நூல் அறிவினின்று முற்றும் வேறானது. அதனால் ஒருவன் மத நூல்

களைப் படிப்பதைத் துறந்துவிட வேண்டும் என்பது கருத்தன்று. ஸ்ரீராமகிருஷ்ணர் கூறுவார்: ''தென்றல்காற்று வீசத் தொடங்கும் வரை விசிறி வேண்டியிருக்கும்.''

கடவுளிடம், முழுகி நீராடு. இது ஓர் உபசார வார்த்தை அன்று. கடவுள்தான் நாடி அடைந்து அனுபவிக்க வேண்டிய பொருள். இந்த வாழ்க்கையிலேயே அவரை அடைய வேண்டும். துயரத்திற்கும் மரணத்திற்கும் இருப்பிடமான இவ்வுலகமாகிற பாலைவனத்தைக் கடக்க வேறு துணை இல்லை.

பகவானிடம் பக்தி செய்வதை விட்டு வேறு எந்த வழியாலும், வறண்டு போன உள்ளத்தில் இன்பத்தையும் அமைதியையும் கொண்டுவர இயலாது.

சுயநலத்தில் நாட்டத்தை விலக்கி, கர்வத்தைக் கைவிட்டு, ஆன்மிகச் சாதனைகளை ஆர்வத்துடனும் முழு மனதுடனும் பழக வேண்டும். அதுதான் கடவுளை அடைய வழி.

ஸ்ரீராமகிருஷ்ணருடைய வாழ்க்கையைச் சிந்தித்துப் பார். அவர் ஏதாவது ஒரு சாதனையைத் தொடங்கினுல் சித்தியடையும் வரை ஆர்வத்துடனும் விடாமுயற்சியுடனும் முழு மனதோடும் அதில் ஈடுபடுவார்.

உழைப்பை விடக்கூடாது. அகங்காரத்தை விட்டுச் சுயநல நாட்டமில்லாமல் உழைக்க வேண்டும். தலைவனுகப் பிறரை ஆளும் எண்ணமோ சுயநலமோ உன்னிடம் நுழையாமல் கவனமாக இரு. நீ செய்யும் பணியெல்லாம் இறைவனுடைய வேலையாள் என்ற நோக்கத்தில் இருக்கட்டும். பணியின் பயனை அவனுக்கு அர்ப்பித்துவிட்டால் உன் செயலனைத்தும் அவனுக்குச் செய்த பூஜையாகி விடும்.

செய்திகள்

※ விருதுநகரில் காமராஜ் நகர் என்ற பகுதியில் விவேகானந்தர் பாலர் பள்ளி இயங்கி வருகிறது. 27-4-81 திங்கட்கிழமை காலை 10-30 மணிக்கு விவேகானந்தர் பாலர் பள்ளிக் குழந்தைகளுக்கு, விவேகானந்தரின் இளமைப் பருவ நிகழ்ச்சிகளைக் கதை வடிவில் சுவாமி கமலாத்மானந்தர் எடுத்துக் கூறினர்.

※ சிவகாசியில் சுவாமி விவேகானந்தரின் பெயரால் 'ஸ்ரீ சுவாமிஜி சன்மார்க்கப் பேரவை' இயங்கி வருகிறது. இந்தப் பேரவையின் சார்பாக ஏப்ரல் 27, 28, 30 ஆகிய மூன்று நாட்களும் சிவகாசியிலுள்ள சிவன் கோவிலில் இரவு 7-45 முதல் 9-15 மணி வரையில் சுவாமி கமலாத்மானந்தரின் ஆன்மிக உபந்நியாசங்கள் நடைபெற்றன.

※ சிவகாசியில், ஸ்ரீ சுவாமிஜி சன்மார்க்கப் பேரவையின் சார்பாக 29-4-81-ஆம் நாள் சுவாமி கமலாத்மானந்தர் ஒரு நாள் அந்தர்யோகம் நடத்தினர்.

※ சிவகாசி, சுவாமிஜி சன்மார்க்கப் பேரவையின் மகளிர்பிரிவு 28-4-81, 30-4-81 ஆகிய இரண்டு நாட்களும் வார வழிபாட்டு சத்சங்கக் கூட்டங்களை நடத்தியது. 28-ஆம் நாள் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்ற சத்சங்கக் கூட்டத்தில் 'இந்துமதமும் தாய்குலத்தின் பங்கும் என்ற தலைப்பிலும், 30-ஆம் நாள் பிற்பகல் 2-30 மணிக்கு நடைபெற்ற சத்சங்கக் கூட்டத்தில் 'சுவாமி பிரம்மானந்தரின் வாழ்வும் வாக்கும்' என்ற தலைப்பிலும் சுவாமி கமலாத்மானந்தர் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

※ சிவகாசி, அருணகிரிநாதர் மாதர் சபையில் ஏப்ரல் 30-ஆம் நாள் மாலை 4-15 மணிக்கு 'அருணகிரிநாதரும் கந்தரனுபூதியும்' என்ற தலைப்பில் சுவாமி கமலாத்மானந்தரின் உரை இடம் பெற்றது.

※ சிவகாசி, சாரதாநகரிலுள்ள அன்னை ஸ்ரீசாரதாமணி மாதர் கழகத்தில் ஏப்ரல் 30-ஆம் நாள் மாலை 5-30 மணிக்குப் பள்ளிச் சிறுவர் சிறுமியருக்கு சுவாமி கமலாத்மானந்தர் அறபோதனை வகுப்பு நடத்தினர்.

※ சிவகாசி, குமரகுருபரர் சங்கத்தில் ஏப்ரல் 30-ஆம் நாள் இரவு 6-45 மணிக்கு 'ஸ்ரீகுமரகுருபரர்' பற்றி சுவாமி கமலாத்மானந்தர் உரை நிகழ்த்தினர்.

※ திருவண்ணமலை, ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த மன்றத்தின் சார்பாக மே 3-ஆம் தேதி ஒரு நாள் அந்தர்யோகம் நடைபெற்றது. சுவாமி ராகவேசானந்தர், சுவாமி குமாரானந்தர், பிரம்மசாரி அபேத சைதன்யா ஆகியோர் அந்தர்யோகம் நடத்தினர்.

※ திருச்சி, பொன்மலையிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சமிதியில் மே 4-ஆம் நாள் மாலை 5-30 மணிக்கு 'அருள்தாகம்' என்ற தலைப்பில் சுவாமி கமலாத்மானந்தரின் சொற்பொழிவு நடைபெற்றது.

※ தமிழ்நாடு, ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த பக்தர்களின் இரண்டாவது மகாநாடும் அந்தர்யோகமும் மே 9,10 தேதிகளில் கோயம்புத்தூர் ஸ்ரீராமகிருஷ்ணமிஷன்வித்யாலயத்தில் நடைபெற்றன. தமிழ்நாட்டிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண மடங்களைச் சேர்ந்த சாதுக்களும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பக்தர்களும் இதில் பங்கு கொண்டனர்.

தானென்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்தது

வி. நடராஜன்

அப்போது இலங்கையில் அரக்கர்களின் மன்னராக விபீஷணர் ஆட்சி செய்து வந்தார். அவர் ஒவ்வோர் ஏகாதசியிலும் ஸ்ரீரங்கத்திற்கு வந்து ஸ்ரீரங்கநாதரைப் பூஜித்துப் போவது வழக்கம்.

இது கோவில் அர்ச்சகர் ஒருவருக்குத் தெரிய வந்தது. அந்த அர்ச்சகர் ஒரு நாள் ஏகாதசியன்று விபீஷணர் வருவதைக் குறிப்பாகப் பார்த்து, அவருடைய புஷ்பக் குடலைக்குள் புகுந்து, ஓர் மூலையில் பதுங்கிக்கொண்டார்.

விபீஷணர் பூஜை முடிந்தபின் வழக்கம்போல் குடலையை எடுத்துத் தோளில் மாட்டிக் கொண்டு இலங்கைக்கு வந்து சேர்ந்தார்.

ராட்சஸர்களுக்கு மனிதர்கள் எறும்பு போன்றவர்கள். ஓர் எறும்பு ஏதேனும் ஒரு பாத்திரத்திற்குள் நுழைந்தால், அதனால் பாத்திரம் பளுவாகத் தோன்றாது. அதுபோல விபீஷணருக்குக் குடலை பளுவாகவே தோன்றவில்லை.

பிறகு விபீஷணர் வழக்கம் போல் புஷ்பக் கூடையைக் கவிழ்க்க, அதிலிருந்து அர்ச்சகர் பொத்தென்று விழுந்தார். அவரைக் கண்ட ராட்சஸர்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

விபீஷணருக்கு அர்ச்சகரிடம் தயை உண்டாயிற்று. அவர், "அடே அர்ச்சகா, உன் தைரியத்தை மெச்சினேன். உனக்கு வேண்டியதைக் கேள், தருகிறேன்" என்றார்.

அர்ச்சகர் அங்குமிங்கும் பார்த்தார். எங்கே பார்த்தாலும் ஒரே தங்கமயமாக இருந்தது. முத்துக்களும் ரத்தினங்களும் வீதிகளில் சரளைக் கற்களைப் போல் சர்வசாதாரணமாக விழுந்து கிடந்தன. அவற்றில் இன்ன கற்கள்தாம் அதிக விலையுள்ளன என்று அர்ச்சகரால் அறிந்து கொள்ள முடியவில்லை. டால் வீசுகிறது. கண் கூசுகிறது. அர்ச்சகருடைய ஆசை அதிகரித்தது.

அவர் மிகுந்த விலையுள்ள ரத்தினங்களைக் கொண்டு போக எண்ணி, விபீஷணரை நோக்கி, "அரசே, இந்த ஊரில் விலை மதிக்கவே இயலாத மிக மிக அபூர்வமான பொருள் எதுவோ அதை எனக்குக் கொடுக்க வேண்டும்" என்றார்.



உடனே விபீஷணர் அவ்வாறே இலங்கை ராஜ்யத்திலேயே கிடைப்பதற்கு அரிய அபூர்வமான பொருளை அர்ச்சகருக்குக் கொடுக்கும்படி பொக்கிஷதாரருக்கு உத்தரவு செய்தார்.

பொக்கிஷதாரர் ஒரு பெரிய பெட்டியில் பத்திரமாய் வைத்திருந்த சிறிய ஓர் ஊசியைக் கொண்டுவந்து அர்ச்சகர் கையில் கொடுத்து, "சுவாமி, உங்கள் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! எங்கள் ராஜா அபூர்வமான இந்த ஊசியை எங்கிருந்தோ சம்பாதித்து வந்து மிகவும் பாதுகாப்புடன் இதுவரையிலும் வைத்திருந்தார். இந்த ஊரில் இந்த ஒரே ஓர் இரும்புச் சாமான் தான் மிகவும் அபூர்வமாக இருந்தது. அப்படிப்பட்ட அருமையான இந்தப் பொருளை எங்கள் அரசர் தங்களுக்குக் கொடுத்துவிட்டாரே!

தாங்கள் உண்மையிலேயே மிகவும் பாக்கிய சாலி. இனி நாங்கள் இரும்புச் சாமானை எப்போது காணப்போகிறோம்?'' என்றார்.

அர்ச்சகருக்கு உண்டான மனவருத்தத்தை யார்தாம் அளவிட்டுச் சொல்ல முடியும்? இதற்குள்ளாக விபீஷணரின் கட்டளைப்படி ஒரு ராட்சஸன் அர்ச்சகரைத் தூக்கிக்கொண்டு, ஆகாயத்தில் பறந்து, ஸ்ரீரங்கத்தில் இறங்கி, அங்கேயுள்ள அம்மா மண்டபத்தினடியில் எறிந்துவிட்டு, இலங்கைக்குப் போய்ச் சேர்ந்தான்.

அப்போது பொழுது விடிய இரண்டு நாழிகை இருந்தன. அந்தச் சமயத்தில் காவேரியில் நீராடிவிட்டு, 'ரங்கநாதா, ரங்கநாதா' என்று ஒரு வைணவர் தியானம் செய்து கொண்டு மண்டபத்துக்கு அருகில் வந்து கொண்டிருந்தார்.

அவர் தலையில் இந்த அர்ச்சகர் தொப்பென்று விழுந்தார். 'அடடா, இதென்ன பெரிய ஒரு கட்டை தலையில் விழுந்ததே!' என்று அந்த வைணவர் பார்த்தார்.

ஆசாமி எதிரில் நின்றார். உடனே கூட்டம் கூடியது. ஊசி சமாசாரம் எல்லோருக்கும் தெரிந்தது. அங்கு வந்த பெண்பிள்ளைகள் எல்லோரும் அர்ச்சகரை நோக்கி உருண்டு உருண்டு சிரித்தார்கள்.

இதனால் மனிதன் எப்போதும் கடவுளை நம்பி, அவர் கொடுப்பதைக் கொண்டு திருப்தியடைய வேண்டும் என்றும், அதிகமாக ஆசைப்படுவதில் வீண்முயற்சியே தவிர உபயோகமில்லை என்றும் அறிகிறோம்.

நிலையான மனதுடைய மனிதன் விதியை நம்புகிறான். ஊசலாடும் மனதை உடைய மனிதன் அதிருஷ்டத்தை நம்புகிறான். —பெஞ்சமின் டிஸ்ரேலி

கெட்டிக்காரனுக்கு எதுதான் சுமை? உழைப்பவனுக்கு எதுதான் தொலைவு? நன்றாகப் படித்தவனுக்கு எதுதான் மற்ற நாடு? அன்பாகவே பேசுபவனுக்கு யார்தான் மாற்றான்? —ஒரு சுலோகம்

குருடன் வழியில் இருக்கும் வைக்கோல் துரும்பை மிதித்தாலும் பீதி கொள்ளுகிறான். அதுபோல மாயையால் கட்டுண்டவர்கள் ஒவ்வொரு சிறிய விஷயத்தையும் கண்டு பயமடைகிறார்கள். —ஞானதரிசினி

பிறப்புக் கொடுத்தவன், நல்வழியில் நடத்தியவன், படிப்புச் சொல்லிக் கொடுத்தவன், அன்னம் கொடுத்தவன், பயத்திலிருந்து காப்பாற்றியவன் இந்த ஐவரும் பிதா என்று கருதப்படுகிறார்கள். —ஒரு சுலோகம்

உன்னிடம் பொருள்கள் இல்லை. உனது இறைவனின் அருளை எதிர்பார்த்திருக்கிறாய். இந்தத் தருணத்தில் உன்னிடம் ஒருவர் ஏதேனும் கேட்கிறார். அந்த அன்பரை நீ புறக்கணிக்கும்படி நேரிட்டால் மிகவும் அன்பான வார்த்தைகளையே அவருக்குக் கூறிவிடு. —குர்ஆன்

துஷ்டர் எல்லோரையும் உயர்பதவியில் வைப்பவனும், தர்மத்துக்குக் கட்டுப்படாதவனும், தன் நடத்தை இவ்வளவு கேவலம் என்பதை முற்றிலும் மறந்தவனும், ஆனால் விதிவசத்தால் ஐசுவரியமடைந்தவனும், நற்குணங்களுக்கெல்லாம் விரோதியும் ஆகிய அற்பனுடைய நாட்டிலிருக்கும் எவன்தான் சுகமடைவான்? —பர்த்ருஹரி



நாராயண உபநிஷதம் கூறும் கருத்துக்கள் முழுவதும் இங்கு உரைநடையில் தரப்படுகிறது.

'ஓம் ஸஹநாவவது' என்பது நாராயண உபநிஷதத்தின் சாந்திபாடமாக அமைந்துள்ளது. 'பத்ரம் கர்ணேபி:' என்ற சாந்தி பாடமும் இதே உபநிஷதத்திற்குச் சில சம்பிரதாயங்களில் காணப்படுகிறது. ஆகையால் இது யஜுர்வேதத்தைச் சேர்ந்ததாகவும் படிக்கப் படுகிறது. அதர்வ வேதத்தைச் சேர்ந்ததாகவும் கருதப்படுகிறது. முக்திகோபநிஷதம் கூறும் வரிசையில் இது பதினெட்டாவது உபநிஷதமாகும்.

* * *

மாயையும் அதனால் விளைந்த அனைத்தும் எதை அறிந்த மாத்திரத்தில் முற்றும் மறைந்து போகுமோ அந்த 'த்ரிபாத் நாராயணன்' என்ற தத்துவத்தை உள்ளது உள்ளபடி கூறுகிறேன்.

ஓம். பரமபுருஷரான நாராயணர் பிரஜைகளைப் படைக்க வேண்டும் என்று சங்கல்பித்தார். (அந்தச் சங்கல்பத்தினால்) நாராயணரிடமிருந்து பிராணன் உண்டாகிறது. மனமும் எல்லா இந்திரியங்களும் உண்டாகின்றன. ஆகாயமும் வாயுவும் ஒளியும் நீரும் உலகிலுள்ள உயிர்களைத் தாங்கும் பூமியும் உண்டாகின்றன. நாராயணரிடமிருந்து பிரம்மா தோன்றுகிறார். நாராயணரிடமிருந்து மக்களை (ஆக்கி ஆளும்) பிரஜாபதி தோன்றுகிறார். நாராயணரிடமிருந்து பன்னிரண்டு ஆதித்தியர்களும், (பதினொரு) ருத்திரர்களும், (எட்டு) வசுக்களும், எல்லா வேதங்களும் தோன்றுகின்றன; நாராயணரிடமிருந்தே இயங்குகின்றன; நாராயணரிடமே ஒடுங்குகின்றன என்று இவ்விதம் ரிக்வேத உபநிஷதத்தில் படிக்கப்படுகிறது.

நாராயணர் என்றுமுள்ளவர். பிரம்மா சிவன் இந்திரன் எல்லோரும் நாராயணரே. காலமும் திசைகளும் திக்குகளும் நாராயணரே. மேலும் கீழும் உள்ளும் புறமும் நாராயணரே. உண்டாகியதும் உண்டாகப்போவதும் ஆகிய இவை எல்லாம் நாராயணரே. களங்கமற்றதும் மாசற்றதும் விகல்பமற்றதும் சொல்லொணாததும் பரிசுத்தமுமாகிய ஒரே தெய்வம் நாராயணரே. அவரைத் தவிர்த்து இரண்டாவது ஒன்றுமில்லை. எவன் இவ்விதம் அறிந்தவனோ அவன் விஷ்ணுவாகவே ஆகிறான் என்று யஜுர்வேத உபநிஷதம் கூறுகிறது.

முதலில் 'ஓம்' என்று சொல்லவும். பிறகு 'நம:' என்றும், அதன்மேல் 'நாராயணாய' என்றும் சொல்லவும். 'ஓம்' என்பது ஓரெழுத்து; 'நம:' என்பது இரண்டெழுத்து; 'நாராயணாய' என்பது ஐந்தெழுத்து; இவ்விதம் நாராயண அஷ்டாக்ஷரம் (எட்டெழுத்து மந்திரம்) அமைந்துள்ளது.

எவன் நாராயண அஷ்டாக்ஷரத்தை ஓதுகிருனே அவன் அபகீர்த்தி இல்லாமல் பூர்ண ஆயுளை அடைவான். பிரஜைகளின் ஆட்சி, செல்வத்தின் நிறைவு, பசுக்கள் முதலியவற்றை உடையவனுகிப் பிறகு அவன் மோட்சத்தை அடைகிருன் என்று ஸாமவேத உபநிஷதம் கூறுகிறது.

உள்ளே விளங்கும் ஆனந்தமயமான பிரம்ம புருஷன் பிரணவ (ஓங்கார) சொரூபி. (பிரண வத்தின் மாத்திரைகள்) அகாரம், உகாரம், மகாரம் என்பவை. அதுவே பலவாக வளர்ந்தது. அந்த ஓங்காரத்தை எந்த யோகி ஜபிக்கிருனே அவன் பிறவித்தளைகளிலிருந்து விடுபடுகிருன். 'ஓம் நமோ நாராயணுய' என்ற மந்திரத்தை உபாசிப்பவன் வைகுண்ட லோகத்தை அடைகிருன். அந்த வைகுண்ட லோகம் ஞானமயமான இதயகமலமேயாகும். அதிலிருந்து மின்னற்கொடி போல் ஓர் ஒளி கிளம்புகிறது. தேவகிபுத்திரன் மதுசூதனன் பிரம்மசொரூபி. கமலக்கண்ணன் பிரம்ம சொரூபி. விஷ்ணு பிரம்மசொரூபி. எல்லா உயிர்களிலும் உறையும் காரணபுருஷன் நாரா யணனே ஆவான். அவனே ஓம் என்ற பரப்பிரம்மம். இவ்விதம் அதர்வ உபநிஷதம் கூறுகிறது.

காலையில் நாராயண உபநிஷதத்தை ஓதுபவன் இரவில் செய்த பாவத்தை நாசம் செய்கிருன். மாலையில் ஓதுபவன் பகலில் செய்த பாவத்தை நாசம் செய்கிருன். உச்சிப் பொழுதில் சூரியனை நோக்கியபடி ஓதுபவன் ஐந்து வித மகாபாதகங்கள், உபபாதகங்களி லிருந்து விடுபடுகிருன். எல்லா வேதங்களையும் ஓதிய புண்ணியத்தை அடைகிருன். நாராய ணனுடன் ஒன்றிய முக்தியை அடைகிருன் என்று கூறி நாராயண உபநிஷதம் நிறைவு பெறுகிறது.

மனுஸ்மிருதியில் சில கருத்துக்கள்

தமிழில் : 'அண்ணு' சுப்ரமண்யம்

மனுஸ்மிருதி என்ற சொல் நமக்கு மிகவும் பழக்கமானது.

ஆனால் தர்மசாஸ்திரமாக விளங்கும் அந்த நூலை நம்மில் பலரும் கண்ணால்கூடப் பார்த்ததில்லை.

மனுஸ்மிருதியைப் படிக்காமலேயே அதைத் தூற்றும் அறிவிலிகள் இன்றும் நம்மிடையே இருக்கத்தான் செய்கிறார்கள்.

புராதன நூலாகிய மனுநீதி சாஸ்திரத்திலிருந்து தேர்ந்தெடுத்த பகுதிகள் விஜயத்தில் தொடர்ந்து வெளியாகும்.

உலக உற்பத்தி

1. இந்த உலகம் ஆதியில் பிரளயத்திற்குப் பின் அனைத்தும் இருள் சூழ்ந்ததாகவும், பிரக்ஞையற்றதாகவும், அடையாளம் எதுவும் இல்லாததாகவும், காரண காரியங்களால் நிச்சயிக்க முடியாததாகவும், அறிய முடியாததாகவும், உறக்கத்தில் ஆழ்ந்தது போலும் இருந்தது.

2. பிறகு தமது இச்சையால் உடல் தரித்த பகவான், இந்திரியங்களுக்குப் புலப்படாதவராக, மகாபூதங்களைப் பிரகாசப்படுத்துகிறவராக, இருளைப் போக்கி இந்த உலகத்தை வெளிப்படுத்துபவராக ஆதியில் தோன்றினார்.

3. எவர் காரணேசுவரர் என்றும், அவ்யக்தர் என்றும், நித்தியர் என்றும், காரண காரிய சொரூபி என்றும் சொல்லப்பட்டாரோ அவரால் ஆதியில் சிருஷ்டிக்கப்பட்ட புருஷர் உலகில் பிரம்மா என்று புகழப்படுகிறார்.

4. பிரம்மா விழித்துக் கொண்டிருக்கும் வரை, அதாவது அவருடைய பகல் நேரத்தில், இந்த உலகம் வேலை செய்கிறது. அவர் எப்போது சாந்தராக உறங்குகிறாரோ, அந்த அவருடைய இரவுக் காலத்தில் உலகம் அனைத்தும் பிரளயத்தில் ஒடுங்குகிறது.

5. அவர் உறக்கநிலையில் இருக்கும்போது, கர்மத்திற்கு ஏற்ப உடல் எடுக்கும் ஜீவர்கள் தத்தம் கர்மங்களிலிருந்து ஓய்ந்து ஸ்தூலதேகம் இல்லாமல் இருக்கிறார்கள். அப்போது அந்த ஜீவர்களுடைய மனமும் செயலற்றதாகிறது.

வேதம் தர்மத்தின் வேர்

6. வேதத்தை உணர்ந்தவர்களாகவும் சாதுக்களாகவும் எப்போதும் விருப்பு வெறுப்பு அற்றவர்களாகவும் உள்ளவர்களால் கைக்கொள்ளப்பட்டு முழுமனதுடன் எடுத்துரைக்கப்பட்ட தர்மம் எதுவோ அதுவே பின்பற்றுவதற்கு உரியது என்று அறிந்துகொள்ளுங்கள்.

7. காமத்தால் தூண்டப்பெற்றுச் செயல் புரிதல் சிறந்ததாகாது. வேதத்தில் கூறப்பட்டிருக்கும் கர்மங்கள் காமியமாகவே இருக்கின்றன.

8. சங்கல்பத்திற்கு வேர் காமம். யக்ஞங்கள் சங்கல்பத்திலிருந்து தோன்றுகின்றன. விரதம், நியமங்கள், தர்மங்கள் ஆகிய எல்லாமே சங்கல்பத்தில் தோன்றுபவை என்று கூறப்பட்டுள்ளது.

9. ஆசையில்லாதவனுக்கு எங்கும் எந்த விதமான செயலும் இங்குக் காணப்படவில்லை. சிறிதளவேனும் எது எதை ஒருவன் செய்கிறானோ அது அது ஆசையின் செயல்.

10. வேதத்தில் கர்ம காண்டம் விதித்த கர்மங்களில் ஈடுபடுபவன் தேவர்களின் உலகை அடைகிறான். இந்த உலகிலும் தன் எண்ணத்திற்கு ஏற்ப எல்லா ஆசைகளையும் அனுபவிக்கிறான்.

11. வேதம் தர்மத்திற்கு அடிப்படை. வேதத்தை அறிந்தவர்களின் ஒழுக்கத்திற்கும் நினைவிற்கும் தர்மமே அடிப்படை. அது போலவே, சாதுக்களின் ஆசாரத்திற்கும்

மனதின் திருப்திக்கும் தர்மமே அடிப்படையாக விளங்குகிறது.

12. வேதத்திலிருந்தும் ஸ்மிருதியிலிருந்தும் தோன்றிய தர்மத்தைப் பின்பற்றும் மனிதன் இந்த உலகில் புகழையும், இந்த உலகை விட்ட பின் ஒப்புயர்வற்ற இன்பத்தையும் அடைவான்.

13. வேதம், ஸ்மிருதி, நல்லோர்களின் நடத்தை, தனது அந்தராத்மாவுக்குப் பிரியமானது என்ற இந்த நான்கு விதங்களில் தர்மத்தின் லட்சணம் விளங்குகிறது என்று பெரியோர் கூறுவர்.

14. பொருளிலும் காமத்திலும் மற்றவர்களுக்கு வேதத்தில் தர்மஞானம் விதிக்கப்படுகிறது. தர்மத்தை அறிய விரும்புபவர்களுக்கு வேதம் உத்தமப் பிரமாணமாகும்.

சீடன்

15. வேதமோதத் தொடங்கும்போதும் முடிக்கும்போதும் குருவினுடைய பாதங்களைத் தொட்டு நமஸ்காரம் செய்ய வேண்டும். கைகளைக் கட்டிக்கொண்டு அத்தியயனம் செய்ய வேண்டும். அது பிரம்மாஞ்ஜலி எனப்படும்.

16. வேதத்திற்கு முன்னும் பின்னும் எப்பொழுதும் பிரணவத்தை உச்சரிக்க வேண்டும். முன்னால் ஓங்காரமில்லாதது மறந்து போகும். பின்னால் இல்லாதது சிதறிப்போகும்.

காயத்ரீ மந்திரம்

17. அகார—உகார—மகாரமும், பூர் புவ: ஸ்வ: என்ற வியாஹிருதிகளும், பிரம்மாவினால் மூன்று வேதங்களிலிருந்தும் சாரமாக எடுக்கப்பட்டவை ஆகும்.

18. மூன்று வேதங்களிலிருந்தே 'தத்' என்று தொடங்கும் காயத்ரீ மந்திரத்தின் ஒவ்வொரு பாதத்தையும் பிரம்மா சாரமாக எடுத்தார்.

19. ஓங்காரமே பரப்பிரம்மம். காயத்திரியை விட உயர்ந்த மந்திரமில்லை. மௌன விரதத்தைவிட, சத்தியவிரதம் மேலானது.

20. வேதத்தில் கூறப்பட்ட ஹோமம் யாகம் முதலிய கிரியைகள் எல்லாம் அழியும் பலனை அளிப்பவை. பிரணவம் அழிவில்லாத பிரம்மம். அந்தப் பிரம்மம் (லௌகிகமும் சுய நலமும் கொண்ட) ஒரு செயலால் அடையப்படுவதன்று என்று பிரம்மா கூறியுள்ளார்.

21. ஜபத்தாலேயே ஒருவன் சித்தி எய்துகிறான். அதில் சந்தேகமில்லை. மற்றவைகளைச் செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி, ஒருவன் ஜபம் செய்வது ஒன்றினாலேயே எல்லா உயிர்களுக்கும் நண்பனாகிறான்.

புலனடக்கம்

22. விஷயங்களில் மனதைக் கவர்ந்து செல்லும் இயல்புடைய இந்திரியங்களை அடக்குவதில், திறமையுள்ள தேர்ப்பாகன் குதிரைகளை அடக்குவது போல் முயற்சி செய்ய வேண்டும்.

23. காமங்களை அனுபவிப்பதால் காமம் ஒருபொழுதும் அடங்குவதில்லை. ஹவிஸ்ஸால் அக்கினியானது விருத்தியடைவது போல், காமங்களை அனுபவிப்பதால் அது மேன்மேலும் வளரவே செய்யும்.

24. ஒருவன் எல்லாக் காமங்களையும் அடைகிறான். மற்றொருவன் அவற்றை முற்றும் துறக்கிறான். எல்லாக் காமங்களையும் அடைவதைக் காட்டிலும் தியாகம் செய்வதே மேலானது.

25. விஷயங்களில் புகும் இந்திரியங்களை எப்படி ஞானத்தால் அடக்க முடியுமோ, அப்படி அவற்றை விஷயங்களை அனுபவிக்காமல் இருப்பதாலேயே அடக்கிவிட முடியாது.

26. லௌகிக விஷயங்களில் பற்றுதல் கொண்டிருப்பவனுக்கு வேதங்களோ தானமோ யாகங்களோ நியமங்களோ தவங்களோ ஒரு பொழுதும் பயனளிக்கமாட்டா.

27. கேட்டாலும் தொட்டாலும் பார்த்தாலும் உண்டாலும் மோந்தாலும் எந்த மானிடன் அதனால் மகிழ்ச்சியையோ துன்பத்தையோ அடைவதில்லையோ அவனே ஜிதேந்திரியன் (புலன்களை வென்றவன்) என்று அறிய வேண்டும்.

28. எல்லா இந்திரியங்களுக்குள்ளும் ஒன்று சஞ்சலமுடையதாக இருந்தாலும்கூட அதனால் ஞானமானது ஓட்டைத் தோல்பையிலிட்ட தண்ணீரைப் போல் ஒழுகிப்போய்விடும்.

29. இந்திரியக் கூட்டத்தை வசப்படுத்தி அவ்வாறே மனதையும் அடக்கி உடலை வருத்தாமல் யோகம் பழகி வாழ்க்கைப் பயன் அனைத்தையும் ஒருவன் சாதித்துக் கொள்ள வேண்டும்.

30. நீர்நிலைக் கரையிலோ அல்லது ஜனசஞ்சாரமில்லாத இடத்திலோ சென்று மனதையடக்கி நித்தியகர்மாவை விதிப்படி செய்து மற்ற மந்திரங்களுடன் காயத்ரீ மந்திரத்தையும் ஓத வேண்டும்.

[தொடரும்]

ஒரு முழுக் கிராமம் இஸ்லாமியமாகிறது!

எம். நாராயணன்

> 12—4—81-ஆம் நாள் இண்டியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் வெளி வந்த செய்தியின் தமிழாக்கம் இது.

தென்காசி, ஏப்ரல் 11, 1981

"லா இலாஹா இல்லலாஹூ

முஹமத்துன் ரஸூலுல்லா."

(அல்லாவைத் தவிர வணக்கத்திற்கு உரியவர் வேறொருவரில்லை. முஹம்மத் அல்லாவின் மதத் தூதுவராவார்.)

'கலிமா'வின் முதல் சில வரிகளை மனப்பாடம் செய்ய வேண்டி, இளஞ்சிறுமிகளும் சிறுவர்களும் ஓர் அரச மரத்தடியில் அமர்ந்து திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருந்தனர். அவர்களிடையே நாங்கள் அழையா விருந்தாளியாக நுழைந்தோம். நாங்கள் நுழைந்தவுடன் அவர்களின் 'கோரஸ்' நின்றது. எங்களை நோக்கி ஓடிவர ஆரம்பித்தனர்.

அங்கிருந்த சிறுவர்கள் லுங்கியும், அளவு போதாத வெள்ளைத் தொப்பியும் அணிந்திருந்தனர். பார்வையிலேயே, இது இவர்கள் பழக்கப்பட்டிராத உடை என்பது தெளிவாய்த் தெரிந்தது. அவர்கள் தங்கள் லுங்கிகளைச் சரிசெய்துகொண்டோ, தலையில் நில்லாமல் விழுந்து கொண்டிருந்த தொப்பிகளைச் சரி செய்துகொண்டோ இருந்தனர். அவர்களைக் கேட்டதும், தங்களது பழைய பெயர்களையும், புதிய பெயர்களையும் கூறலாயினர். அவைகளில் சில: அஸரத்-சுப்பிரமணி, மல்லிகா பீவி—மல்லிகாராணி போன்றவை.

அந்தக் கிராமத்து இளைஞர்கள் ஆர்வத்துடன் நாங்கள் இருந்த இடத்திற்கு வந்தனர். அப்பொழுது நண்பகல் வேளை; 'லுஹார்' (பிரார்த்தனை) நேரம். வெள்ளிக்கிழமையான தால், அன்று முஸ்லிம்களுக்குத் தொழுகை முக்கியம்; மேலும், மதம் மாறிய புதிய முஸ்லிம்களுக்கு மிகவும் விசேஷமான தொழுகை நேரம்.

மீனாக்ஷிபுரம் தற்போது ரஹ்மத்நகர் என அழைக்கப்படுகிறது; இது தென்காசியிலிருந்து 10 கி. மீ. தொலைவிலுள்ள தென்போதை பஞ்சாயத்தின் கீழுள்ள ஒரு கிராமம். தமிழ்நாட்டிலுள்ள மற்றக் கிராமங்களைப் போலவே அமைதியான கிராமமாகத்தான் மீனாக்ஷிபுரமும் இருந்து வந்தது. மலையடிவாரத்திலிருந்து, சற்றுத் தள்ளி அமைந்துள்ள இந்தக் கிராமம் மூன்று பக்கமும் மேற்கு மலைத்தொடரால் சூழப்பட்டுள்ளது. இந்தக் கிராமத்தை அடைய, தென்காசி – பன்போலி சாலையில் திரும்பிய பின் ஒரு கி. மீ. தூசியும் சேறும் நிறைந்த சாலையைக் கடக்க வேண்டும்.

காளியம்மன், கறுப்பன், மாடசாமி, வினை தீர்க்கும் விநாயகர் இந்நால்வரும் அக் கிராம மக்களின் நலனைக் காக்கும் காவல்தெய்வங்கள். ஒவ்வொரு வருடமும், சித்திரை இரண்டாம் செவ்வாயும் (ஏப்ரல் நாலாவது வாரம்) அதைத் தொடர்ந்து இரண்டு நாட்களும் வேடிக்கையிலும் விளையாட்டிலும் கழிகின்றன.

மீனாக்ஷிபுரம் இப்போது யாரும் கவனிப்பாரற்று, பரபரப்பான அமைதியில் மூழ்கியுள்ளது. திடீரென்று மதமாற்றம் ஏற்பட்டுள்ளது. 180 ஹிந்து ஹரிஜனக் குடும்பங்கள் தங்கள் மதத்தை மாற்றிக்கொண்டுள்ளனர். கிட்டத்தட்ட ஆயிரம் மக்கள் தங்கள் மதமாக இஸ்லாமியத்தை ஆக்கிக் கொண்டுள்ளனர். வருடந்தோறும் நடைபெறும் கோடைத் திருவிழாவிற்குப் பிறகு இன்னும் ஐம்பது குடும்பங்கள் இஸ்லாமியத்தைத் தழுவ உள்ளனர். இத் திருவிழா ஏப்ரல் கடைசியில் வருகிறது. அவர்கள் தங்கள் பழைய கடவுளருக்கு எந்தக் குறையும் வைக்க விரும்பவில்லை என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

இந்த மதமாற்றத்தைப் பற்றி அறிய நாங்கள் மீனாக்ஷிபுரம் சென்றோம். 65 வயதான

வெள்ளைச்சாமி என்ற விவசாயி 'வாழ்வின் கடைசிக் காலத்தில், நிம்மதிக்காக மதமாற்றம் அவசியம்' எனக் கூறினர். 'ஹரிஜனங்களுக்காகச் செய்யும் நன்மைகளால் நாங்கள் பயனடைவதில்லை' என்றும், 'இஸ்லாமியத்தில் சேருவதால் நாங்கள் எதையும் இழக்கப் போவதில்லை' என்றும் அவர் தெரிவித்தார்.

"போலீஸ் எங்களை அழிக்க விரும்புகின்றனர். நாட்டில் எங்கு எந்தத் தீமை நடந்தாலும் நாங்களே பொறுப்பாளியாக நினைக்கப்படுகிறோம். நாங்கள் போலீஸ் அதிகாரிகளுக்குப் பணம் கொடுக்க விரும்பவில்லை. ஏனெனில் நாங்கள் கொடுமைக்கு ஆளாகிறோம்" என்று அவர் தெரிவித்தார்.

35 வயதான தங்கராஜ் என்பவர் (மருத்துவக் கல்லூரியில் படித்துப் பாதியில் வெளியேறியவர்), போலீஸ் கொடுமையால் வாழ்க்கை மிக மோசமாகியுள்ளது எனத் தெரிவித்தார். "ஹரிஜன் என்ற வார்த்தை வெறுப்பை உண்டாக்குகிறது. வாழ்க்கைத்தரம் உயர்ந்தாலும், சமுதாயத்தில் எங்கள் இடம் மறுக்கப்படுகிறது" என்று அவர் தெரிவித்தார்.

உயர்பள்ளியில் பயிலும் முகம்மத் இஸ்மாயில் என்ற முருகேசன், பள்ளியில் நண்பர்களும் ஆசிரியர்களும் தன்னைப் பழைய பெயராலேயே அழைப்பதாய்க் கூறுகிறான். மேலும் படிப்பையோ, அராபிய மொழியையோ, கலிமாவையோ தவிர மற்ற மாற்றங்கள் தன்னுள் மாற்றத்தை ஏற்படுத்தமாட்டா எனத் தெரிவித்தான்.

23 வயதான ரூஹய்யல் பேகம் (செல்வம்), இஸ்லாமியப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்க முயன்றுகொண்டிருந்தாள். அவள் வீட்டிலிருந்த ஹிந்துக் கடவுளரின் படங்களை நீக்கிவிட்டு, மெக்காவிலிருக்கும் 'தர்க்கா' படத்தை மாட்டியிருக்கிருள். அவளது 3 வயதான குழந்தை கதீஜல் (யசோதா) சிறிதும் தயக்கமின்றித் தன் பெயரைச் சொல்கிருள். அக் குழந்தையின் பழைய பெயரைக் கேட்டபோது, அக் குழந்தை தாயின் அநுமதிக்காக அவள் முகத்தைப் பார்த்தது. தான் கண்ட புன்சிரிப்பைத் தனக்கு வழங்கப்பட்ட அனுமதியாகக் கொண்டு, தன் பழைய பெயர் 'யசோதா' எனத் தெரிவித்தது.

70 வயதான திருமதி சண்முகம், இதுவரை இம்மாதிரியாக எதுவுமே கிராமத்தில் நடந்ததில்லை என்று அழுதுகொண்டே தெரிவித்தார். இவருடைய இரண்டாம் மகன், மனைவி, மக்கள் மதம் மாறியுள்ளனர். நம்பிக்கையிழந்த வகையில், இவர் தம் குடும்பத்தில் அனைவரும் தங்கள் விருப்பப்படி, மதம் மாறியுள்ளதாய்த் தெரிவித்தார்.

அலெக்ஸாண்டர் (26-மொஹமத் யூஸப்) கிராமத்திலுள்ள 3 கிறிஸ்துவக் குடும்பங்களில் (மதம் மாறி இஸ்லாமியரானவர்களில்) ஒருவர். இவருக்கு மனைவியும் மூன்று குழந்தைகளும் உள்ளனர்.

45 வயதான பரமசிவம் (இவர் பெயர் தற்போது அஸரப் அலியாக மாற்றப்பட்டுள்ளது), தாம் கட்டாயப்படுத்தி மதம் மாற்றப்பட்டதாய்த் தெரிவித்தார். மதமாற்றம் நடந்த தினம் (பிப்ரவரி-19), அவர் மீனாக்ஷிபுரம் வந்ததாகவும், அவர் பெயரும் சேர்க்கப்பட்டிருந்ததாகவும் கூறினர். யாரோ அவர் தலையில் தொப்பி அணிவித்துப் புதுப் பெயர் வைத்ததாய்த் தெரிவித்தார். என்ன நடக்கிறதென்பதைக் கிரகித்துக் கொள்வதற்குள் எல்லாம் நடந்து முடிந்து, கூட்டத்திலிருந்த உறவினர்களே தம்மைப் புதுப் பெயரால் அழைக்கத் தொடங்கியதாக அவர் கூறினர்.

4000 இஸ்லாமியர்கள், பக்கத்துக் கிராமங்களான தென்காசி, கடையநல்லூர், வடகரையிலிருந்து வந்து இதில் கலந்துகொண்டனர். சாகுல் ஹமீத் MLA, கடையநல்லூரைச் சேர்ந்தவர், முக்கியப் பங்கு வகித்தார். இதில் இஸ்லாமிய மதத் தலைவர்களும் கலந்து கொண்டனர். கிராமமே திருவிழாக் கோலம் கொண்டிருந்தது. பஜர் தொழுகை (காலைத் தொழுகை)யிலிருந்து ஆரம்பமாகியது. பின், லுஹார், அசர், மஹரிப் போன்ற தொழுகைகள் முறையே 1, 4-30, 6-40 மணிக்கு நடைபெற்றன. இத் தொழுகைகளின் போது அனைவரும் கலிமா சொல்லுகின்றனர். 'கலிமா'வின் பின் அல்லாவை, மேற்கு நோக்கி

மண்டியிட்டுத் தொழுகின்றனர். ஹரிஜனங்களின் திருமணங்கள் இஸ்லாமிய முறையில் புதுப்பிக்கப்பட்டன. இஸ்லாமியப் பெண்கள் ஹரிஜன வீடுகளுக்குச் சென்று, மணப்பெண்களை அழைத்து வந்தனர். அவர்கள் குளித்து, நல்ல உடை அணிவிக்கப்பட்டபின், குரான் ஓதி, திருமணங்கள் நடைபெற்று, இஸ்லாமிய மதப் படி, அவர்கள் திருமண தம்பதியர் ஆக்கப் பட்டனர்.

மீனாக்ஷிபுரத்திலிருக்கும் ஹரிஜனங்கள், மற்றக் கிராம மக்களைவிட மாறுபட்டவர் களாயுள்ளனர். 40 சதவிகிதத்தினர் படித்தவர் களாயுள்ளனர். சராசரி வசதியுள்ளவர்கள். அவர்களில் 90 சதவிகிதத்தினர் திருவாவடு துறை மடத்திற்குச் சொந்தமான நிலங் களிலும், பக்கத்து மேற்கரை கிராம நிலங் களிலும் பயிரிடத் தங்கள் பெயரைப் பதிவு செய்துள்ளனர்.

சிலர் அரசாங்கத்தில் நல்ல பதவி வகிக் கின்றனர். தங்கள் உயர்ந்த பொருளாதார நிலை காரணமாகவும், படித்தவர்களின் எண்ணிக்கை அதிகமாயுள்ளதனாலும், சமு தாயத்தில், தேவர்களுக்குச் சமமான இடம் கேட்டனர். ஆனால், அவர்கள் மட்டமாக நடத் தப்பட்டனர். அவர்கள் தங்களுக்கு ஹோட்டல் களில் காபி, டீ தனியான டம்ளர்களில் கொடுக்கப்பட்டதாய்க் குறை கூறுகின்றனர். மற்ற ஹிந்து மக்கள் பேருந்துகளில் அதிக எண்ணிக்கையில் இருந்தால் தாங்கள் உள்ளே அனுமதிக்கப்படவில்லையெனக் கூறுகின்றனர். சிலர் மதம் மாறினால், ஆறுதல் பெற முடியு மென்ற முடிவிற்கு வந்தனர். இந்தச் சமயத்தில் மேற்கரையில், ஒரு இரட்டைக்கொலை நடந்தது. கொல்லப்பட்டவர்கள் தேவர்கள். இக் கொலைக்கு ஹரிஜனங்கள் குற்றம் சாட்டப் பட்டனர். மேலும், கள்ள நோட்டுகள் அச்சடிக்கும் யந்திரம் ஒன்று கண்டுபிடிக்கப் பட்டது. இதை ஆராய்ந்த போலீஸ் அதிகாரி ஒரு தேவர். இதன்பொருட்டு ஹரிஜனங்கள் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டதாகவும் சட்ட விரோதமாய்ச் சில ஹரிஜனக் குடும்பங்கள் ஒரு மாதத்திற்கு மேல் கொடுமைக்கு ஆளான தாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்தக் கொடுமை யிலிருந்து விடுதலை பெற, ஹரிஜனங்கள் இஸ்லாமிய மதத்தில் அடைக்கலம் தேடலா யினர். இம்மாதிரியான மதமாற்றம் இங்குள்ள ஹிந்துக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. அவர்கள் திரு ராமசந்திர தேவர் தலைமையில் 'ஹிந்து சமுதாய வளர்ச்சி மன்றம்' ஆரம்பித்தனர்.

மீனாக்ஷிபுரத்தைச் சேர்ந்த 25 ஹரிஜனங்கள் மாவட்ட ஆட்சியாளரிடம் பாதுகாப்புத் தேவையென எழுத்துமூலமாய் மனுக் கொடுத் துள்ளனர். மற்றொரு மனுவும் கொடுக்கப் பட்டுள்ளது. இதில், தற்போது மதம் மாறி யுள்ள இஸ்லாமியர் மசூதிகட்டத் தேர்ந் தெடுத்திருக்கும் இடம், காளியம்மன் கோவிலைச் சேர்ந்ததென்றும், அதற்கும் இஸ்லாமியருக்கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லை எனவும் குறிப் பிட்டுள்ளனர்.

இந்த மன்றத்தார், ஊர்ச்சாவடிகளில் தொழுகைகள் நடப்பதை எதிர்த்து, அந்த இடங்கள் காளியம்மன் கோவிலுக்குச் சொந்த மானவை எனக் குறிப்பிட்டுள்ளனர். ஊரின் பெயர் மாற்றத்தைக் குறித்தும் இவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

நடுவில் பழையபடி, 50 புதிய இஸ்லாமி யர்களை, மறுபடியும் ஹிந்துக்களாக்க மன்றம் விஸ்வ ஹிந்து பரிஷத் (திருநெல்வேலி) உதவி யுடன் ஏற்பாடு செய்துள்ளது.

—Sunday Standard, 12-4-1981

கெட்டிக்காரன் தவறு வெளிக்குத் தெரியாது. முட்டாளின் தவறுதான் தம்பட்டம் அடிக்கும்.

—அமெரிக்கப் பழமொழி

எவன் தன் குடும்பத்தைத் தாங்காமலும், பகைவரை அழிக்காமலும், உள்ள பொருளைக் காப்பாற்றாமலும் இருக்கிறானோ அவனுக்கு உயிர் வாழ்க்கையால் ஆகும் பயன் யாது?

—சுக்கிர நீதி

இந்துமதமும் மத மாற்றமும்

சுவாமி புதானந்தர்

மதவெறி வந்தால் மதிவெறி தோன்றும். மதநெறி, மனித நெறி எல்லாம் காற்றில் துரும்பெனப் பறந்து போகும்.

இந்த இதழிலேயே, 'ஒரு முழுக் கிராமம் இஸ்லாமியமாகிறது!' என்ற தலைப்பில், 1981 ஏப்ரல் 12-ஆம் தேதி 'ஸண்டே ஸ்டாண்டர்ட்' இதழில் வெளியான செய்தியை மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளோம். நம் பாரத மண்ணிலும் அயல் நாடுகளிலும் வாழும் ஹிந்துக்களும், தமிழ்நாடு அரசும், மத்திய அரசும் விழித்தெழுந்து இந்தக் கவலைநிலை களைய ஆவன செய்ய வேண்டிய அவசியத்தை வலி யுறுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

எம் மதத்தைச் சேர்ந்தவராயினும், இந்தச் சம்பவத்தின் பின்விளைவுகளைப் பற்றி; ஒவ் வொரு தேசாபிமானமுள்ள இந்தியனும் சிந்திக்க, சிந்தித்துச் செயலாற்றக் கடமை அழைக்கிறது எனும் உண்மையைக் கவலையுடன் வெளியிடுகிறோம்.

I

நமது அரசியல் சாஸனம், செக்ஷன் 25-இன் உத்தரவாதத்தின்படி ஒவ்வொரு குடிமகனும் தனது மதத்தை, மதக் கொள்கைகளை, யாருடைய குறுக்கீடுகளுமின்றி, யாருக்கும் தொந்தரவோ ஆயாசமோ தராத நிலையிலே, பூரண சுதந்திரத்துடன் கடைப்பிடிக்கலாம்.

வயது வந்த எந்தக் குடிமகனும் விரும்பினால் வேறு எந்த மதத்திலும் சேரலாம்.

ஆனால் மந்தை மந்தையாக மக்களை மதம் மாற்றும் செயலை நேர்மையானதாகவோ, தார்மிகமானதாகவோ, சட்டத்தின் வரம்பிற்கு உட்பட்டதாகவோ கொள்ள முடியாது.

ஒரு மதத்தினர் இன்னொரு மதத்தவரை மத மாற்றம் செய்வதற்கும் மேலாக, பெற்றோர் கூட வயதுக்கு வராத எந்தப் பிரஜையையும் மத மாற்றம் செய்வதோ, செய்ய வழிகோலுவதோ நிச்சயம் சட்டத்திற்குப் புறம்பான செயலாகும்; தர்மத்தைக் கேலி செய்வதாகும்; மனிதன் வளர்த்துக் காத்து வரும் பாரம்பர்யத்தின் முகத்தில் கரிபூசுவதாகும்.

மேற்சொன்ன சம்பவத்திலே சட்டத்தின் அடிப்படைகள் அறவே புறக்கணிக்கப்பட்டிருப் பதைக் காண்கிறோம். நாகரிகம் நழுவி விட்டதைப் பார்க்கிறோம். தர்மத்தை அவமதித் துள்ளது எதிரொலிக்கிறது. இந்த விஷமத் தனம் நிறைந்த மதமாற்றங்களின் பின்விளைவு களை ஆராய வேண்டியது நம் ஒவ்வொருடைய தலையாய பொறுப்பாகும்.

ஒரு ஊரிலுள்ள மக்களை ஒட்டுமொத்தமாக அநேக சூழ்ச்சிகளாலும் வலுக்கட்டாயத் தாலும் மதம் மாற்றியிருக்கும் கொடுமை மிகவும் அவமானகரமானதும் கொடூர மானதும் ஆகும்.

இப்படி மதம் மாற்றப்பட்ட குடும்பத்தினரின் உறவினர்கள் அநேக ஊர்களில் வாழ்ந்து கொண்டிருப்பர். வகுப்புக் கலவரங்கள் மூளும் போது தன் ரத்தத்தின் ரத்தத்திடமே பகை கொள்ளும் அவல நிலை உருவாகும். இப்படி நேரவிடுவது நியாயமா?

ரிக்வேத காலம் தொட்டு அண்மையில் வாழ்ந்த பகவான் ராமகிருஷ்ண பரமஹம்சர் வரை, ஒவ்வொரு ஸநாதன தர்ம தீர்க்கதரிசி யும் எம் மதத்தையும் ஆண்டவனை அடையும் ஒரு மார்க்கமாகவே நினைத்துச் சமாதான நோக்கிலே வாழ்ந்தனர். இந்த இணையற்ற சமரச நோக்கு இந்து மதத்திற்கு மட்டுமே உரித்தான தனித் தன்மை.

நமது ஆசாரியர்களோ மதபோதகர்களோ எந்தக் கட்டத்திலும் பிற மதத்தின் கொள்கை களை விமர்சிக்கப் புகுந்ததே இல்லை. மாறாக ஒவ்வொரு பிற மதத்தின் கிரந்தங்களையும்

ஆராய்ந்து அது அதிலே கடைப்பிடிக்கப்பட்டிருக்கும் சத்திய நோக்கங்களை அறிந்து மகிழ்ச்சியெய்தினர்.

ஆனல் மதத்தைப்பற்றிப் பிரசாரம் செய்ய நாடுவிட்டு இங்கு வந்தோர் செய்தது என்ன? நம் கொள்கைகளை எள்ளி நகையாடியும், நம் தெய்வங்களைப் பழித்தும் பிரசாரம் செய்தனர். இதற்கெல்லாம் இந்து மக்கள் எதிர்க்கவோ சண்டையிடவோ இறங்கவில்லை. நமது இந்து மதத்தின் இணையில்லாத அரும்பெரும் பாரம்பர்யமான சகிப்புத் தன்மையைக் கைக்கொண்டனர். நடுத்தர வர்க்கத்திடமும் உயர் வர்க்கத்திடமும் தமது பிரசார சக்தி பலிக்காமற் போகவே, இந்த அயல்மதத்தினர் கீழ் மட்டத்திலுள்ள மக்களை அநேக வழி முறைகள் மூலம் கவர்ந்து மத மாற்றம் செய்யத் தொடங்கினர். அதனல் கிடைத்த வெற்றிகள், அவர்களுக்குச் சேர்ந்த புதிய பலம், இவைகளைக் கொண்டு மேலும் நம் மக்களின் ஈரநெஞ்சில் நஞ்சையூட்டி நிறையப் பெரும் அளவில் மத மாற்றம் செய்யலானர்கள். இந்த நாணயமற்ற முன்னேற்றத்தைப் பலமாக வைத்துக்கொண்டு புதுப் புது மரபுகளை நமது கலாசாரத்துடன் பிணைத்துக் கலந்து, நமது பாரம்பர்யமான எந்தச் சடங்கு நடந்தாலும் அதைத் தங்களுக்கு இடையூருக உள்ளது என்று காரணம் கற்பித்து, கலவரங்களைத் தோற்றுவித்து, ஒரே மண்ணின் மைந்தர்களான நம்மைப் பிரித்து மீளாப்பகை நிரந்தரமாகிவிட என்ன என்னவோ செயல்களையெல்லாம் மேற்கொண்டுள்ளார்கள்.

அதன் ஓர் உதாரணம்தான் இன்று மீனுக்ஷிபுரம் கிராமத்தில் நடந்திருக்கும் ஒட்டுமொத்தமான கட்டாய மதமாற்றம்.

இந்த நடப்புக்களை நமது மாநில அரசும், மத்திய அரசும், மக்களும் மெத்தனமாக இருந்து வளர விட்டுக்கொண்டே போனல் உள்நாட்டுச் சமாதான நிலைக்குப் பாதுகாப்பே இல்லை. இம்மாதிரி ஒரு நிச்சயமற்ற நிலையை நெருப்பைப் போல் மடியில் கட்டிக்கொண்டு ஒரு நாடு எப்படி முன்னேற முடியும்? பொறுப்பிலுள்ளவர்கள் அவசரமாகச் சிந்திக்க வேண்டும். அவசியமான முடிவுகளை உடனே அமல்படுத்த வேண்டும்.

II

இந்த 'மத மாற்றம்' இடையூறில்லாமல் வெற்றிபெற வேண்டி இந்தக் கிராமத்தின் அண்டை ஊர்களிலிருந்து ஆயிரக் கணக்கில் முஸ்லிம் மக்கள் வந்து கலந்துகொண்டு செயலாற்றியிருக்கின்றனர். இதிலே பெண்களும் கலந்து வந்துள்ளதாகச் சொல்கிறர்கள். இவ்வளவு பேர் பங்கேற்று நடத்திய இந்த 'மத மாற்றம்' வெகு நாட்களாகத் திட்டம் தீட்டி நிறைவேற்றப்பட்ட ஒன்ருகவே கருத வேண்டியுள்ளது. இந்தத் திட்டங்களுக்கென எங்கெங்கிருந்தோ பெருநிதி வந்துதான் இது நடந்துள்ளது.

இம்மாதிரிச் சம்பவங்களில் படுதாவிலிருக்கும் முஸ்லிம் பெண்களும் ஆர்வமுடன் கலந்து கொள்ள வந்தது ஒரு புதிய உத்தியாக நம் கண்களுக்குத் தோன்றுகிறது.

இந்த முஸ்லிம் படுதா அணிந்தவர்கள் இந்தக் கிராமத்தின் அரிஜனங்களின் வீடுகளுக்குள் புகுந்து அங்குள்ள பெண்களை அழைத்து வந்தார்களென்றும் அறிய வருகிறேம். படுதாவுக்குள் இருந்தவர்கள் ஆண்களாகத்தான் இருந்திருக்கக் கூடும். அவர்கள் வீட்டினுள் புகுந்து பெண்களைப் பயமுறுத்தி அழைத்து வந்திருக்க வேண்டும். இதுதான் உண்மை நிலை என நாம் திட்டவட்டமாக அனுமானிக்க வேண்டியுள்ளது. நம் நாட்டின் எந்தப் பெண் மணியும், வாழையடி வாழையாய், தான் பிறந்து வளர்ந்து வந்துள்ள மதத்தையோ பாரம்பர்யத்தையோ கலாசாரத்தையோ எந்த ஆசைக்காகவும் துறக்கச் சம்மதிக்க மாட்டாள். அச்சுறுத்தல் அல்லது தன்னைச் சார்ந்தோருக்கு ஆபத்து என்ற நிலை வருமானல் அவர்கள் மனம் மாற இடமுண்டு. அன்றி அவர்களே மனமுவந்து இசைந்தனர் என்று கூற வந்தால் அது வெறும் புரட்டாகத்தான் இருக்க முடியும்.

III

ஒரு புறம் மதமாற்றம் நடந்துகொண்டிருக்கும்போதே, மறு புறம், M.L.A. ஒருவர்

மிகையான, செயற்கை அவசரத்துடன் மசூதி கட்டுவதற்கான அடிக்கல்லை ஓர் இடத்தில் நாட்டினர். அந்த இடம் அவ்வூர்க் காளி அம்மன் கோயிலுக்குச் சொந்தமான நிலம். இந்தச் செயல் சட்டத்திற்குப் புறம்பானது மட்டுமல்ல – வேண்டுமென்றே நம் மக்கள் மனதைப் புண்படுத்தும் நோக்கத்துடன் நடத்திய அக்கிரமமாகும். கல் நாட்டும் சமயத்தில் யாராவது தடுக்க வருவாரேயானால் ஒரு மதக் கலவரம் மூளட்டும் என்ற உள் நோக்கமும் எதிரொலிக்கிறது இந்த அவசரக் கல்நாட்டு நடப்பிலே.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நபர் இப்படி ஒரு சட்டவிரோதமான, தார்மிக துரோகமான செயலில் ஈடுபட்டது வேலியே பயிரை மேய்ந்தது போலாகிறது. சொத்துரிமையில் தான்தோன்றித்தனமாகத் தலையிட்டு அத்துமீறிச் செயற்பட்டது, வோட்டளித்த மக்களையும், அரசையும், அரசியல் சாசனத்தையும் அவமதித்த செயலாகிறது. இதை அரசாங்கம் ஆராய்ந்து தடைவிதிக்க வேண்டும்.

IV

மேல்மட்டத்திலுள்ளோரின் மெத்தனமும் அலட்சியமும் கீழ்மட்டத்தவரை மதமாற்றத்திற்கு இசைய வைத்துள்ளது என்று தொனிக்கும்படியாகச் செய்திகள் தரப்படுகின்றன. இது வேண்டுமென்றே செய்யப்படும் அநீதி. கூலிக்கு மாரடிக்கும் வர்க்கத்தின் அடிவருடித்தனம். இந்த 'மதமாற்ற' மாய்மாலம், திட்டமிட்டு ஒத்திகை பார்த்து நடத்தப்பட்ட ஒரு 'கூத்து' என்பதை நிரூபிக்கிறது, பின்வரும் விளக்கம். கிடைத்த செய்திப்படி "சம்பவம் நடந்த தினத்தில் வெளியூரிலிருந்து பரமசிவம் (வயது 45) (அரிஜனப் பிரஜை) இவ்வூருக்கு வந்தார். அவர் வந்ததும் அவரைச் சூழ்ந்து கொண்டு, சிலர் சடங்குகளைச் செய்து தலையில் குல்லாயைக் கவிழ்த்து, இனி உன் பெயர் அஷ்ரப் அலி என்றும் கூறினர். கண் இமைக்கும் நேரத்தில் நடந்தேறிய சம்பவத்தின் அதிர்ச்சியிலிருந்து அவர் மீண்டபோது எல்லோரும் தம்மை அஷ்ரப் அலி என அழைப்பதைக் கேட்டுத் திகைத்தார். நடந்ததை உணர்ந்து பயந்தார். வீடுதிரும்பியதும் வீட்டார் அவரைக் கோபித்து ஒதுக்கினர்." இது தண்டிக்கப்பட வேண்டிய பெருங் குற்றமல்லவா?

கண்டனத்திற்கு உரிய மற்றுமோர் பெரும் அநீதியும் நடந்துள்ளது. இவர்களை மதம் மாற்றிய மௌல்வி, குரானை ஓதியபின், மணமான தம்பதிகளின் மணவினையினை இஸ்லாமிய முறைப்படி புதுப்பித்துள்ளார். எந்த ஒரு சமூகத்திலும் ஆண்டுகளுக்கு முன்பே நடந்துவிட்ட மணத்தனையைப் புதுப்பிக்கும் செயல் நடப்பதில்லை. தங்களுக்கே நம்பிக்கையில்லாத அஸ்திவாரத்தைச் சிறு சிறு கொம்புகளைக் கொண்டு முட்டுக் கொடுப்பது போலுள்ளன இந்தத் தாறுமாறுச் செயல்கள்.

ஒரு மதச் சடங்கின்படி கணவன் மனைவியாகிவிட்ட தம்பதியை வேறு மதச் சடங்கு புதுப்பிக்கும் அர்த்தமற்ற விந்தையைக் கண்டு சிரிப்பதா அழுவதா என்று புரியவில்லை.

இந்த மதமாற்றம் செய்யப்பட்ட தம்பதியருக்குப் பிறந்த குழந்தைகள் எந்த மதத்தைச் சேர்ந்தவை? முன் மதச் சம்பிரதாயப்படி நடந்த மணவினையில் பிறந்த மதத்தைச் சேர்ந்தவர்களா—அல்லது மாற்றப்பட்ட மதத்தைச் சேருமா—இப்படிச் சிக்கலுக்கு மேல் சிக்கல்கள், குழப்பங்கள் அடுக்கடுக்காய்க் கிளைக்கத்தான் போகின்றன.

இந்த மதமாற்றம் ஆழ்ந்த அரசியல் நோக்கங்களைப் பின்னணியாகக் கொண்டனவே அல்லாமல், மதப் பண்பாடுகளின் மேன்மைக்காக நடந்தவை அல்ல என்று தீர்மானமாகக் கொள்ளலாம்.

இன்னும் சொல்லப் போனால், அடிக்கல் நாட்டியவர் ஒரு மௌல்வியல்ல, ஒரு M.L.A. என்று சிந்தித்துப் பார்க்கும்போது அரசியல் நோக்கங்களே தாண்டவமிடுவது அம்பலமாகிறது. இந்த M.L.A. பிரஜை குர்ஆனை ஆழ்ந்து படிப்பாரேயானால் நபிநாயகம் அவர்கள் கூறிய பின்வரும் உண்மையைப் படித்துத் திகைப்பார்:— (குர்ஆன் 11:257) "மதவிஷயங்களிலே வலுக்கட்டாயத்திற்கு இடமே இல்லை."

" ஒவ்வொருவருக்கும் அவரவர் மனோதர்மப்படி வாழ, எளிதில் பிடிபட்க்கூடிய முறையும்,

கட்டுப்பாடும் ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ளன. வேறு விதமாக ஆண்டவன் நினைத்திருந்தால் மக்களை ஒரே இனமாக, சமூகமாகப் படைத்திருப்பார். ஆனால் மக்கள் தம் தம் வழியிலே நின்று தேர்ந்து முன்னேறவே அநேகம் மார்க்கங்கள் தரப்பட்டுள்ளன. ஆகையால் நல்லெண்ணத்தைக் கைக்கொண்டு முன்னேறுங்கள். முடிவில் ஆண்டவனிடம் போய்ச் சேரும்போது உங்களுக்கு உடன்பாடில்லாத மற்ற விஷயங்களைப்பற்றித் தெளிவு கிடைக்கும்.'' (V : 48)

''உனக்கு உன் சமயமே. எனக்கும் என் சமயமே.'' (C. IX : 6) 43 குர்ஆன்.

V

செய்தி மேலும் சொல்லுகிறது, 'சிறுவர்கள் நழுவும் லுங்கி, பொருந்தாத சிறிய குல்லாய் இவற்றுடன் காட்சியளித்தார்கள்' என்று கட்டாயப்படுத்தப்படும் விஷயங்கள் நழுவித்தான் போகும், சரியாகப் பொருந்தாது எனச் சுட்டிக்காட்டுவது போல, தெய்வாதீனமாக இச் சம்பவம் அமைந்துள்ளது. மேலே அடையாளங்களை மாற்றுவதனால் உள்ளே வேரூன்றி வளர்ந்துவிட்ட பழைய மதப்பண்பாடு அழிந்துவிட முடியாது. இந்த யதார்த்தம் அலட்சியம் செய்யப்படுவதால் அரசியல் நோக்கம்தான் அடிப்படை என்ற சித்தாந்தம் தெளிவாகிறது.

ஒரு நீதிவிசாரணைமூலம் உண்மைகள் தெளிவாகும் வரை இந்தத் தார்மிகமற்ற செயலுக்கு எல்லா இந்துக்களும் ஒருமுகமாக எதிர்ப்புத் தெரிவித்துத் தாங்கள் இதை அங்கீகரிக்காததோடு வேறு எங்கும் இனி இதுபோன்று நடக்கவிடாமலும் காக்க வேண்டும்.

இந்த நீதிவிசாரணை முடிவாகும்வரை மதம் மாறிய புதுப் பெயரிலே எந்த தஸ்தாவேஜும் மாற்றப்படாதிருக்கத் தடையுத்தரவும் பிறப்பிக்க வேண்டும். அதுவரை எல்லாம் பழைய அசல் பெயரிலேயே நிலைத்திருக்க ஆவன செய்தாக வேண்டும்.

VI

மீனாக்ஷிபுர வாசிகளான அரிஜனங்கள் கட்டாய மதமாற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பது அவர்களே நிருபர்களிடம் கூறியுள்ள செய்திகளினின்று தெளிவாகிறது.

1. கடைசிக் காலத்தில் எங்கள் அமைதி சிதைபடுவதைத் தவிர்க்கவே இதற்கு உடன்பட்டோம்;
2. எங்களுக்கெனத் தரப்பட்டிருக்கும் சலுகைகள் எங்கள்வரை எட்டுவதே இல்லை;
3. எங்கே குற்றம் நடந்தாலும் எங்களைச் சந்தேகிக்கிறார்கள். பணம் கொடுத்து எங்களைக் காத்துக் கொள்ளும் வசதியின்மை காரணமாகக் காவல் பிரிவு எங்களைத் தொல்லைப்படுத்துகிறது. எங்களுக்குரிய அடிப்படை உரிமைகளும் சர்வ சாதாரணமாக மறுக்கப்படுகின்றன.

இந்த முறையீடுகளை எல்லா இந்துக்களும் தலைவர்களும் மிகுந்த விழிப்போடும் அனுதாபத்தோடும் சிந்திக்க வேண்டும். இந்தக் குறைபாடுகளை நீக்க வழி தேட வேண்டுமே தவிர, இது உண்மைதானா என ஆராயப் புகுவதில் அர்த்தமில்லை. இந்துக்களின் அங்கமான அரிஜனங்களின் மிகப் பழமையான இக் குறைபாடுகளை வேகமாகக் களைந்து, அவர்களும் சம உரிமையுடன் அமைதியாக வாழ வழி செய்வதே 'இந்து' என்று தன்னைக் கூறிக் கொள்ளும் பிரஜையின் பொறுப்பாகும். அரிஜனங்கள் மனதிலே இருக்கும் பீதியை அறவே அகற்றி, அவர்களுக்கு உத்தரவாதமான, அமைதியான நல்வாழ்வு மலர ஒவ்வோர் இந்துவும் பாடுபடுவது, என்றோ எங்கோ நம்மை அறியாமல் புகுந்துவிட்ட மாசைக் களைவதாகும். அறியாமல் நடந்து விட்டாலும் குற்றம் குற்றமே. அதை ஒப்புக்கொண்டு பரிகாரம் காண்பதில் தாழ்வில்லை. மேன்மையும் மாண்புமே சேரும். இந்தக் கணத்திலிருந்தேனும் ஒவ்வோர் அரிஜனக் குடிமகனுக்கும் மனிதாபிமானம் கிடைக்க வேண்டும். நீதி கிடைக்க வேண்டும்.

VII

கடந்துபோன காலத்திலே, முறையாகவோ முறைகேடாகவோ முஸல்மானாக அல்லது கிறிஸ்தவனாக மதம் மாற்றப்பட்ட நபரை இந்து சமூகம் வெறுப்பைக் காட்டி ஒதுக்கிய

தோடல்லாமல், திரும்பவும் அவர்கள் இந்து மதத்தில் சேர வழியில்லாமலும் நடந்து கொண்டது. தவற்றை நினைந்து திரும்பி வர நினைப்போருக்கு அடைபட்ட கதவு பிற மதத்தினருக்கு மேலும் துணிவைத் தந்தது. மத மாற்றங்கள் ஊக்கமுடன் நடக்க ஆரம்பித்தன. பெரும்பான்மை கொண்ட இந்துக்களின் எண்ணிக்கை குறைய ஆரம்பித்தது. சிறுபான்மையின் எண்ணிக்கை வளர்ந்தது. இந்துக்கள் சிறுபான்மையினராகிவிடும் ஆபத்து நெருங்கிக்கொண்டிருக்கிறது. இந்துக்களுக்குக் கட்டாயக் கர்ப்பத்தடை விதிக்கப்பட்டு மேலும் எண்ணிக்கை சுருங்க ஆரம்பித்துள்ளது. குடும்பக் கட்டுப்பாடு திட்டம் மற்ற மதத்தைச் சார்ந்தோர்க்குத் தீவிரமாக்கப்படவில்லை. அவர்கள் பெரும்பான்மை அடைய வாய்ப்புக்கள் ஓங்கியுள்ளன. இந்த ஆபத்தான கட்டத்திலே, கூட்டம் கூட்டமாக மதமாற்றம் செய்யும் நடவடிக்கை அறவே ஒடுக்கப்பட வேண்டும். சுதந்திரமாகத் தம் விருப்பத்தின்படி வயது வந்த தனி மனிதன் மட்டுமே மதம் மாறலாம் என்ற முறை அமலாக வேண்டும்.

இங்கே சுவாமி விவேகானந்தர் ஒரு முறை கூறிய வார்த்தைகளைக் கவனமாகச் சிந்திக்க வேண்டும். ஒரு நிருபர் விவேகானந்தரிடம் கேட்டார், ''மதம் மாற்றப்பட்ட இந்துக்கள் திரும்ப இந்து மதத்தில் சேர விரும்பினால், தங்கள் கருத்து என்ன? அவர்கள் திரும்ப வரவேற்கப்பட வேண்டியவர்களா?'' என்று. சுவாமி விவேகானந்தர் பளீரென எதிரொலித்தார், ''கண்டிப்பாக வரவேற்கலாம். வரவேற்கப்படவேண்டும்'' என்று. சற்று நேர அமைதிக்குப் பின் விவேகானந்தர் தொடர்ந்தார், ''அப்படிச் செய்யாவிட்டால் நம் எண்ணிக்கை மேலும் நலிவடையும். முதல்முதலாய் இஸ்லாமியர் நம் நாட்டில் அடியெடுத்து வைத்தபோது, பரிஷ்தா என்ற சரித்திர ஆசிரியரின் கூற்றுப்படி, அறுபது கோடி இந்துக்கள் இருந்திருக்கிறோம் எனக் கூறியுள்ளார். இப்போது நாம் இருபது கோடியாக நலிந்துள்ளோம்!''

மேல்தள வர்க்கத்தாரின் நடப்பால் நொந்து போய்க் குறைகூறும் நமது அங்கமான அரிஜனங்களின் வேதனையுணர்வை மதிக்காமல் மெத்தனமாக இருந்ததே நமது முதல் வழுக்கல். பின்னர் இந்த மதமாற்றங்களின் அடிப்படையை ஆராயாமல் இருந்தது இரண்டாவது வழுக்கல். இவ்வளவுக்குப் பிறகும் அரிஜனங்களின் பிரத்தியட்சக் குறைகளைக் காணாமல் கண்ணை மூடிக்கொண்டது தற்கொலைக்கு ஒப்பான மூடச் செயல். நமது பரந்த பாரதநாடு முழுவதும் கிராமம் கிராமமாக உழைத்து வாழும் நமது அங்கமான அரிஜன மக்களைப் பற்றி சுவாமி விவேகானந்தர் குறிப்பிடும் போது, 'இவர்கள் நமது ரத்தத்தின் ரத்தம்' எனப் பொருள்படும்படி பேசியிருக்கிறார். இவர்கள் காலம் காலமாகத் தம் வேதனைகளை மௌனமாகச் சுமந்து தொண்டாற்றி வரும் நல்லவர்கள். இனியும் தாங்க முடியாது எனும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். அந்த நிலையை நீடிக்க விட்டதனால்தான், பிற மதத்தவர்கள் அநேகம் 'மீனாட்சிபுர'ச் சூழலை உருவாக்கி வெற்றி கண்டார்கள். இதன் பின்னணியிலே பணபலமும் சூழ்ச்சியும் பலவந்தமும் நடமிடுவதை நாம் உணர்ந்து உடனடியாகப் பரிகாரம் காண வேண்டும். எங்கெங்கே அரிஜன மக்கள் அதிகமாக உள்ளனரோ அங்கெல்லாம் நிலவும் நமது பலவீன நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி மேலும் மேலும் இச் செயல்கள் பிற மதத்தவர்களால் தீவிரமாக்கப்படும். நம்மிடையே இப்போது விழிப்பு மட்டும் போதாது. ஆக்கச்செயல் அதிகரிக்க வேண்டும். மனிதாபிமானம் என்ற நம் பாரம்பரிய மரபு தளிர்த்துத் தழைக்க வேண்டும். நாடு தழுவிய இந்து இயக்கங்களாலும், இந்துமத நிறுவனங்களாலும் நமது அங்கமான அரிஜன மக்களின் வாழ்வு வளம்பெற, மேன்மையடைய, குறைகளைய, புதிய திட்டங்களைப் புகுத்திச் செயற்பட்டு வெற்றி காண வேண்டும். அயராமல் ஒன்று சேர்ந்து உழைத்து நம் தாய்நாட்டைக் காக்க வேண்டும். அதற்குத் தியாகமும் சேவையும் தான் துணை நிற்கும். பிரசாரங்களும் கட்டுரைகளும் பயன் தரா. இன்றைய அரிஜனங்களின் முக்கிய வேதனை, 'பணம் கிடைக்கிறது என்றாலும், மதிப்பு மறுக்கப்படுகிறதே, அந்தஸ்து புறக்கணிக்கப்படுகிறதே' என்பவைதாம். இந்த ஏக்கத்தைத் துடைக்க ஒவ்வோர்

இந்துவும் சபதமேற்க வேண்டும். அவர்களையும் மனிதராக மதிக்க வேண்டும். அவர்களின் வாழ்வில் நம்பிக்கை வேரூன்றும்படி பரிவுடன் நடந்துகொள்ள வேண்டும். இல்லையேல் 'மீனாட்சிபுரங்கள்' வளரும் ஆபத்தை எதிர் கொள்ள நேரும்.

நம் முன்னே இப்போது பெரும் கேள்விக்குறி யாகச் சீறும் பிரச்னை, 'நாம் இன்னும் பழைய, அர்த்தமற்ற உயர்வு தாழ்வு கற்பிக்கும் மூட இயல்பையே கட்டிக்கொண்டு அழப்போகி றோமா, அல்லது, நமது இணையற்ற ஆன்மிகச் செல்வமான வேதமதத்தின் கோட்பாடுகளுக் கொப்ப, குறைகளைக் களைந்து, நம்மை வேற்றுமைகளுக்கெல்லாம் அப்பாற்படுத்திக் கொண்டு, சீலமான, 'வேற்றுமையிலும் ஒற்றுமை' என்ற உண்மை உறுதிநிலையை வளர்த்து நிலைநாட்டப் போகிறோமா?' என்பதுதான்.

காலம் கடந்துவிடவில்லை. ஆனால் ஏற்கனவே தாமதமாகிவிட்டது. விரைந்து செயற்படு வோம். நிறைந்த வாழ்வை மீட்போம்.

பிற மதத்தினருக்கு நேசக் கரம் நீட்டி அமைதியை அறிவுறுத்திப் புகட்டுவோம். அன்பின் அர்த்தத்தை முழுமையாக உணர்த்து வோம். உண்மையை ஒளிவீசச் செய்வோம். போலித்தனங்களை விரட்டியடிப்போம். இந்து என்ற சொல்லே, அன்பை நினைவூட்ட வேண்டும்; அறம் என்ற பண்பைப் பறைசாற்ற வேண்டும்; ஒற்றுமை என்ற உரத்தை ஓங்கி ஒலிக்க வேண்டும். ஆன்மிகமே மனிதனின் கலாசாரம் என்ற உண்மையை நிலைநாட்ட வேண்டும். கருணை என்ற செயலே நமது வேள்வி என்று ஆகிவிட வேண்டும். அப்போது எந்தத் தீய சக்தியும் நம்மிடம் பணிந்து திருந்திவிடும். பாரதமாதாவின் கவலை தீர்ந்து அமைதி நிலவும்.

சிதறிக் கிடக்கும் நமது சக்திகளை ஒன்று சேர்ப்போம். அசோக சம்ராட்டின் 'ஸமவாய ஏவ ஸாது:' (எதையும் சமநோக்குடன் அணுகு பவனே முழு மனிதன்) என்ற சொல்லின் அர்த்தத்தை நிலைநாட்டுவோம்.

சம்ராட் அசோகருடைய கல்வெட்டு எண் 12-இன் சாராம்சம்: "அசோக சக்கரவர்த்தி எல்லா மார்க்கத்தையும் சேர்ந்த மனிதர் களாலும், எல்லா மதத்தையும் சேர்ந்த சீலர் களாலும், இதர சாதாரண மக்களாலும், பரிசுகள் மூலமாகவும், விருதுகள் மூலமாகவும் வெகுவாக மதித்துப் போற்றப்பெறுகிறார். ஆனால் இந்தப் பரிசுகளோ காணிக்கைகளோ அவரைக் கவரவில்லை. வெவ்வேறு மதத்தை, மார்க்கத்தைச் சேர்ந்த ஒவ்வொரு தனி மனிதனின் மாண்பும்தான் அவருக்குப் பிரதான மாகத் தோன்றியது. அந்த மாண்பு அநேக விதமாகத் தோன்றலாம். ஆனால் அடிப்படை ஒன்றே என்ற உண்மை மாற முடியாது. இந்தக் கோணத்திலே, தன் மதத்தை மட்டுமே உயர்வாக எண்ணாமல், அடுத்தவரது மதத் தையும் குறை கூறாமல் வழுவுவதே, சமரசம் எனும் நேர்மை. பிறரை மதிக்கும்போது நம்மை நாமே உயர்த்திக் கொள்கிறோம். மாறாகப் பிறரைக் குறைகூறும்போது நம்மை நாமே இழிவுபடுத்திக்கொள்கிறோம். ஆகவே சமரச ஞானம், பரஸ்பர மரியாதை இவை நமக்குப் பிறரிடமுள்ள உயர்வுகளைக் காட்டித் தருகின்றன. அப்போது நாம் அந்தப் பிறரையும் போற்றும் பண்புக்கு உரியவராகிறோம். நேசக் கரம் நம்மை நோக்கி நீள்கிறது. நாம் உரம் பெறுகிறோம்."

அசோக சக்கரவர்த்தியின் பரந்த மனப் பான்மையையொட்டி இஸ்லாம் சமயமும் முன்பு சிந்திக்கவே செய்திருக்கிறது. இதனை, அக்பரின் மனநிலையை அப்துல் பஸல் பின் வருமாறு விளக்கியுள்ளதன் மூலம் அறியலாம் :-

"எந்தப் பிரார்த்தனைக் கூடமாயினும் அங்கு ஆண்டவனின் நாமம்தான் ஒலிக்கிறது. பல தெய்வங்களைக் கொண்டோரும் ஆண்டவனைத் தான் நினைக்கின்றனர். ஒரே கடவுளைக் கொண் டாடுவோனும் அதே ஆண்டவனைத்தான் வேண்டுகிறான். நிரீசுவரவாதியும் அதே ஆண்டவனை ஏதோ ஓர் இனம் புரியாத சக்தி யாக உணர்கிறான். இறைவா, உம் மக்களான நாங்கள் ஆலயத்திலும் சர்ச்சிலும் மசூதியிலும் உன்னைத்தான் வணங்குகிறோம். எந்த முறை யால் உன்னை அடைய நினைத்தாலும் நீ எம்மை ஏற்றுக்கொள்கிறாய். அதேபோல் உன் மக்களான நாங்கள் ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ளும் பண்பை எமக்குள் நிலைநாட்டி அமைதியை அருள்வாய். அன்பே இறைவன்."

'ஸமவாய ஏவ ஸாது:'

தன் நன்னடத்தையினால் தகப்பனைத் திருப்தி செய்பவனே புத்திரன்.
கணவனுடைய நன்மையையே விரும்புகிறவள் மனைவி.
துன்பத்திலும் இன்பத்திலும் சமமாக நடப்பவனே மித்திரன்.
இந்த மூன்றும் இவ்வுலகில் புண்ணியவான்களுக்குத்தான் அமைகின்றன.

—பர்த்ருஹரி

தியான வேளையிலே....

எப்.ஜே.அலெக்சாண்டர்

தியான வேளைகளில் குருவின் குரல் பேசிப் புத்திமதி கூறும் :—

I

இதோ பார்! புற உலகம் (அண்டம்) ஒன்று இருப்பது போல உள் உலகமும் ஒன்று இருக்கிறது. நாமரூப பேதத்தாலான வெளிப் பிரஞ்சத்துடன் ஆத்ம உலகமும் ஒன்று உள்ளே இருக்கிறது. குழந்தாய், அதிசயங்களும் அற்புதங்களும் மர்மங்களும் அழகும் விஸ்தாரமும் மிகுந்த மகிமையும் வெளிப்பிரபஞ்சத்தில் இருக்குமேயானால் அளவிட முடியாத பெருமையும், சக்திகளும், இன்னதென்று விவரிக்க வொண்ணாத நிரதிசய ஆனந்தமும் அமைதியும் அசைக்க முடியாத பரம்பொருளாகிய உண்மைத் தத்துவத்தின் அஸ்திவாரமும் உள் பிரபஞ்சத்திலும் உள்ளன. ஆ என் மகனே! இந்த உள் உலகத்தின் போலி, பிரதிபிம்பம், வெளித்தோற்றம் என்று சொல்லத் தக்க வகையில்தான் வெளி உலகம் அமைந்திருக்கிறது. மேலும், இந்த உள் உலகத்தில்தான் உன் உண்மை ஸ்வரூபம் குடிகொண்டிருக்கிறது. இங்கே நீ எல்லையற்ற ஒன்றில் நித்திய வாழ்க்கை வாழ்கிறாய். புற உலகமோ கால வரையறைக்கு உட்பட்டதே ஆகும். இங்கே முடிவென்றுமில்லாத, ஆழம் காண முடியாத, அளவற்ற பேரானந்தம் உள்ளது; வெளி உலகிலோ உணர்ச்சிகளெல்லாம் சுக துக்கங்களோடு சேர்ந்தேயிருக்கின்றன. இங்குங்கூடத் துக்கம் உள்ளது—ஆனால், ஆகா! என்ன ஆனந்தமயமான துக்கம் அது! உண்மைப் பொருளான பரம்பொருளை முழுவதும் உணர்ந்துகொள்ள முடியவில்லையே என்ற பரவச நிலையில் எழும் என்ன ஆனந்த ஏக்கம் அது! இப்படிப்பட்ட துக்கம்தான் அபரிமிதமான தெய்விக ஆனந்தம் பெறுவதற்கு உரிய வழியாகும்.

வா, இந்த உள் உலகத்தில் உன் இயற்கைச் சுபாவம் முழுவதையும் புகுத்திக்கொள்; உன் இயற்கைச் சுபாவம் அங்கு நன்கு விரிந்து பரந்திருக்கும்படி செய்துகொள். வா, என்னிடம் வைத்திருக்கும் பிரேமையாகிய சிறகுகள் கொண்டு ஓடி வா. குருவுக்கும் சீடனுக்கும் உள்ள உறவைக்காட்டிலும் மேலானதாகவும் நெருக்கமானதாகவும் வேறு ஓர் உறவு உண்டா?

ஓ என் மகனே, என் மகனே, பேரன்பின் இயல்பு மோனமே ஆகும்—இன்னதென்று எடுத்துச் சொல்ல முடியாத மௌனம் அது. இந்த மோனத்தின் மிகமிக ஆழமான மடிப்புகளின் உள்ளாழத்திலே கடவுள் வீற்றிருக்கிறார். வெளி விவகாரங்களெல்லாம் விட்டு விலகிவிடு. நான் எங்கெல்லாம் செல்கிறேனோ அங்கெல்லாம் நீயும் வா! நான் எப்படியெல்லாம் ஆகிறேனோ அப்படியெல்லாம் நீயும் ஆவாய். ஆகா! கடவுளின் அந்தப் புனிதத்தன்மையை அடைவோமாக! பக்தனின் இதயத்திற்குள்ளே பல கோவில்கள் இருக்கின்றன. அந்தக் கோவில்களில் நறுமணம் கமழும் சாம்பிராணியின் புகை போல, எண்ணம் கடவுளை நோக்கி மேலெழுந்து உயர்ந்து செல்கிறது. நீ செய்யும் எல்லாக் காரியங்களையும் ஆன்மிகமயமாகச் செய்துவிடு. உருவம் இருப்பதில் பார்ப்பதைப் போலவே, உருவம் இல்லாததிலும் பிரம்மத்தையே, தெய்விகத்தையே காண்பாயாக.

கடவுளைக்காட்டிலும் நலம் பொருந்தியது பிரபஞ்சத்தில் வேறு எதுவுமே இல்லை.

ஆர்வம் மிகுந்த பிரேமை பக்தியினாலோ, ஆர்வம் மிகுந்த பிரார்த்தனையினாலோ, ஒருவன் பிரவேசிக்கும் உள்ளுலகின் உள்ளே உள்ளே உள்ளேயுள்ள இடங்களில் தெய்வசக்தியைப் புரிந்துகொள்ளும் வகையில் உலகங்களுக்கு மேல் உலகங்களாக (அண்டத்திற்கு மேல் அண்டமாக) உள்ளன. கடவுளோ எப்போதும் அருகிலேயே இருக்கிறார். அவர் அருகில் இருக்கிறார் என்பது ஸ்தூல அர்த்தத்தில் சொல்லப் படவில்லை; அவர் சமீபத்தில் இருக்கிறார் என்பது சூட்சுமமாகிய பாரமார்த்திக அர்த்தத்தில் சொல்லப்படுகிறது. அதாவது அதன் பொருள், உன் ஆத்மாவுக்கும் ஆத்மாவாக அவர் இருக்கிறார் என்பதாகும். உன் ஆத்மாவின் சாரமேதான் அவர். உன் எண்ணங்களை யெல்லாம், மிகவும் ரகசியமான வெளியிடப் படாத, இதயத்தில் மௌனமாக மறைந்திருக்கும் அபிலாஷைகளையெல்லாம் அவர் அறிந்திருக்கிறார். அவரைச் சரணாகப் பற்றிவிடு; உன்னை ஆத்ம நிவேதனம் செய்துவிடு. எவ்விதக் கைம்மாறும் எதிர்பாராமல் பக்திக்காகவே பக்தி செய்; எவ்விதக் கைம்மாறும் எதிர்பாராமல் வேலைக்காகவே வேலை செய். மௌனம் என்ற மாளிகையின் உள்ளறைக்குள் செல்; சத்வஸ்துவாகிய பரம்பொருளின் சந்நிதானத்திற்கு வந்து சேர். எவ்வளவுக்கு எவ்வளவு தூரம் நீ உன் உள்ளுக்குள்ளேயே செல்கிறாயோ, அவ்வளவுக்கு அவ்வளவு தூரம் நீ என்னிடம் நெருங்கி வருகிறாய்; நீ உன்னுள்ளே தூர தூரச் செல்லச்செல்ல என்னைக் கிட்டிக் கிட்டி அணுகுகிறாய். ஏனென்றால், உன்னிடம் மிகவும் ஆழத்தில் அந்தர்யாமியாக உறைபவன் நானே. உனது ஆத்மாவின் மகிமையை வெளிப்படுத்தும் பொருட்டும், உனது ஆத்ம சாட்சாத்காரத்தின் பொருட்டும் உன்னை இழுத்துக்கொண்டிருக்கிற காந்தம் நான். நான் சுத்தான்மா! எண்ணத்தாலோ உருவத்தாலோ தீண்டப்படாத சுத்தான்மாவே நான்! என்னைக் காயப்படுத்தவும் முடியாது, அழிக்கவும் முடியாது! நான்தான் ஆத்மா! நான்தான் பரமாத்மா! இதோ பார், நான் பிரம்மம்! நான் பிரம்மம்.

II

குருவின் அருளுரைகள்தாம் என்ன ஆனந்தமாக, ஆச்சரியமாக இருக்கின்றன! என் ஆத்மா கூவிக் குரலிடுகிறது:—

ஓ ஆனந்தமயனே! தாங்களே கடவுள். தாங்கள் உபதேசம் செய்யும் அந்த உபதேசமும் தாங்களே ஆகிறீர்கள். உலகெங்கும் நிறைந்த விசுவாத்மா நீங்களே. எல்லாவற்றிலுமுள்ள எல்லாமும் நீங்களே. எல்லாவற்றிலும் மேம்பட்டவர், சர்வசக்தி வாய்ந்தவர் தாங்களே. உங்களுடைய மாயை நாநாரூபத்தின் மகிமையைப் பிரகாசப்படுத்தியபோதிலும், உங்களுடைய சொரூபம் ஏகத்துவமே ஆகும். உள்ள ஒரு பொருளின் ஒப்பற்ற மகிமை தங்களுடையதே. ஏனெனில், சுத்தான்மா என்பது ஒன்றே ஒன்றுதான். சுத்தான்மாவாகிய ஸாரத்தில், பாகங்களோ பாகுபாடுகளோ இல்லை. சுத்தான்மாவின் ஓர் ஒப்பற்ற ஒளிதான் பலவித வர்ணக் கண்ணாடிகளின் வழியாகப் பலவாகப் பார்க்கப்படுகிறது. ஓ என் குருதேவரே, ஓ என் ஐயனே, எந்த வாழ்க்கை தங்களுடையதோ அதில் என்னைப் பிடித்துப் போட்டுவிடுங்கள். ஓ! தாங்கள்தாம் பிரம்மா, தாங்கள்தாம் விஷ்ணு, தாங்கள்தாம் சதாசிவன், தாங்களே பிரம்மம், தாங்களே பரப்பிரம்மம்.

''ஹர ஹர, வ்யோம், வ்யோம் மஹாதேவா!''

பின்னர், ஏழாவது சொர்க்கம் என்று சொல்லப்படும் இடத்திற்குத் தூக்கி உயர்த்தப் பட்டுவிட்டதைப் போல என் ஆத்மா பரவச நிலையை அடைந்தது. அங்கே மனிதனின் தெய்விகத்தன்மையை நான் கண்டுகொண்டேன்; மனித பலவீனத்திலுங்கூட உள்ள மகத்துவத்தை நான் கண்டேன். எல்லாம் தெய்வத்தன்மை பொருந்தியதே என்பதைக் கண்டேன். இந்தப் பேரொளி வட்டத்திற்குள்ளே அந்த உள் உலகத்தின் சாட்சாத்கார மலைமீது கிருஷ்ணபகவானின் மற்றோர் உருவம் போல (ரூபாந்தரம் போல) குருநாதர் நிற்கக் கண்டேன். ஆழத்தில்—காலம் கணக்கிட இயலாத மிகவும் ஆழத்தில்—பரந்த வெளியைக்காட்டிலும் எல்லாவற்றையும் தன்னுள்ளே அடக்க வல்லதாகிய தியானம் என்ற உள் உலகம் இருக்கிறது. அந்த இடத்தை

இருள் என்பதே அணுக முடியாது; காரணம், அங்கு எல்லாமே ஒரே பேரொளிமயமாகவே திகழ்கிறது. அங்கே அஞ்ஞானம் இருக்க முடியாது; காரணம், அங்கு எல்லாமே ஞான மயமாகத் திகழ்கிறது. அங்கே மரணம் சந்தடியின்றி மெதுவாகப் பின்தொடர முடியாது; தீ எரிக்க முடியாது; தண்ணீர் நனைக்க முடியாது; காற்றும் உலர்த்த முடியாது. புராண புருஷனுகிய ஆதி அந்த மற்ற பரம்பொருளின் இருப்பிடம் அது. வாழ்க்கையின் பொய்த் தோற்றங்களுக்கெல் லாம் அப்பாற்பட்டதாகவும், அசலமாகவும், எல்லையற்றதாகவும் அந்த நித்திய வஸ்து திகழ்ந்துகொண்டிருக்கிறது.

அந்த உரை கடந்த, மகத்துவம் பொருந்திய மிகவும் ஆழமான பகுதியிலிருந்து பேசிய குரு கூறியதாவது :—

“என் மகனே, எனது ஆன்மிகச் செல்வத்தின் உரிமை முழுவதும் உன்னுடையதே ஆகும். வரம்பற்ற வலிமை உன்னுடையது. உன் னுடைய சக்தி சர்வசக்தி வாய்ந்ததாக இருக்கும் போது நீ பலவீனனு என்ன! புத்தியை வெளிக் காட்டுவதோடு திருப்திப்பட்டுக்கொண்டு நீ சும்மா இருக்க முடியாது. வெளியுலகத்தின் ஆடம்பரக் கண்காட்சிக்குப் பின்னுல் மரணமும் ஞாபகமறதியும் மறைவாகப் பதுங்கியுள்ளன. உடல் மரணத்தால் கவ்வப்பட்டபோது அது சவமாகிறது. ஆனல் ஆத்மாவோ என்றும் கட்டற்றுச் சுதந்திரமாகவே இருக்கிறது. அது உடலற்றது; அது கேவலம் சாட்சி மாத்திர மாய் நிற்பது—ஏனெனில் உடல்கள் அழிக்கப் பட்டபோதிலும் அது ஒருபோதும் அழிக்கப் படுவதில்லை, அழிக்கப்படவும் முடியாது.”

அப்பால் என் ஆத்மா குருவுடன் தியானத் தில் கலந்து கூறியதாவது:—“அப்படியானல், என் ஐயனே. என்ன ஆச்சரியம்! மரணம் என்று ஒன்றில்லை! சாவு என்ற ஒன்று இல்லவே இல்லை!”

நான் அவ்விதம் தெரிவித்ததும் குரு அதற்குக் கூறிய பதிலாவது :—“ஆம், மரணம் என்று ஒன்றில்லை; ஆசாபாசங்களில் வேரூன்றிய புலன்நுகர் வாழ்க்கையும் இல்லை.

“ஆசாபாசங்களில் வேரூன்றிய புலன்நுகர் வாழ்க்கையின்மீது வேட்கை கொள்ளும் கடைத்தரமானவர்களுக்குச் சேறும் சகதியும் நிறைந்த உலக வாழ்க்கை என்ற சாக்கடை இருக்கிறது. அவர்கள் தங்கள் உடல் முழுவதும் அந்தச்சாக்கடையின் சகதியைப் பூசிக்கொண்டு, அந்தச் சாக்கடையிலேயே விழுந்து புரண்டு களிக்கும் எருதைப் போலத்தான் காமமாகிய நாற்றக் குழியில் விழுந்து வெறி கொள் கிருர்கள். அவர்கள் செல்ல வேண்டிய வழி மிகமிக நீண்ட தூரத்தில் இருக்கிறது; அந்த வழி, ஆசை என்ற பாவும் ஊடும் கலந்து நெய்யப்பட்ட மாயையினுல் நன்ருகப் பிடிக்கப் பட்டுள்ளது. எல்லாவற்றையும் கடந்து நீ செல்! உனக்கு உரிய ஒரு காலம் வரும். மேலே பார்! என்றென்றும் ஒளி வீசும் விளக்குகள் மேலே இருக்கின்றன! மேலே பார்! அந்த ஒளி விளக்குகள் உன் ஆத்மாவின் இருளைத் துளைத்துக்கொண்டு சென்றே தீரும்!”

இந்த உரைகளைக் கேட்டபின்பு என் ஆத்மா ஞாபகப்படுத்திக் கொண்டது — தெய்விகம் தான் ஆத்மாவின் உண்மையான இயல்பாகும். எல்லாப் பந்தங்களிலிருந்தும் விடுபட்டு விடுதலை யடைவதே லட்சியம். அந்த லட்சியமோ இப்போதே, இங்கேயே அடையப்பட்டதாக வேண்டும்; இறந்த பிறகு வேறு ஓர் உலகில் அடைவதல்ல அந்த லட்சியம்! வாழ்க்கையில் ஒருவன் அடைய வேண்டிய முடிவான லட்சியம் ஆத்ம சாட்சாத்காரமே என்பது நிச்சயத் திலும் நிச்சயம். எங்கே காலம் அழிக்கப்பட்டு விட்டதோ, எங்கே உடலைப்பற்றிய உணர்வே இல்லாமல் காற்றில் பறந்துபோய் விட்டதோ, எங்கே ஒளியே வாழ்க்கையாகத் திகழ்கிறதோ, எங்கே உண்மைப் பொருளாகிய சாந்தம் ஒளிவீசிப் பிரகாசிக்கிறதோ, எங்கே கனவுகளெல்லாம் முடிவடைகின்றனவோ, எங்கே அகண்டாகாரமான ஓர் உணர்வில் ஆசைகளெல்லாம் விழுங்கப்பட்டு விடு கின்றனவோ, அந்தத் துரீயப் பெருவெளியில் நின்று ஆத்ம சாட்சாத்காரம் பெறுவதுதான் அடையப்பட வேண்டிய முடிவான லட்சியம் என்பது நிச்சயத்திலும் நிச்சயம்! ஆகா! அகண்டாகாரமாய் மகத்துக்கும் மகத்தான எல்லையற்ற ஓர் உணர்வை நான் பெறுவேனு? காலத்தை அழித்து வெற்றி கொள்வேனு,அதா வது காலத்தின் வரம்புகளையெல்லாம் கடந்து விடுவேனு? ஆகா! புலன் உருவாக்கும் உருவங் களை ஒழித்து ஜயம் பெறுவேனு? ஆகா! எல்லை யற்ற பொருளின் தளைகளிலிருந்து விடுபட்ட சுதந்திரத்தன்மையை நான் எய்துவேனு?— என்ற ஆவல் மேலிடுகிறது.

ஹரி : ஓம் தத் ஸத்!

★ ★ ★

தனது உணவுக்காகக் கவலைப்படுவது லோகாயத சிந்தனை. அடுத்தவன் உணவுக்குக் கவலைப்படுவது ஆன்மிகச் சிந்தனை. —மார்ட்டைன்

ஆன்மிக உரையாடல்

சுவாமி துரியானந்தர் (கூடியிருந்த சன்னியாசிகளைப் பார்த்து): நீங்கள் யாவரும் இல்லறம் புகாதது, புகாமலே துறவியானது, உங்களுடைய பூர்வ சம்ஸ்காரபலனேயாகும். இதையெல்லாம் நீங்கள் முன்பே முற்பிறவிகளிலேயே பூர்த்தி செய்துவிட்டீர்கள். எனவே மறுபடி வீட்டு வாழ்க்கை புக உங்களுக்குத் தேவை ஏது? எல்லாவற்றையும் புரிந்துகொண்டதனாலேயே நீங்கள் துறந்தீர்கள். இப்படி விசேஷ உரிமையினாலேயே நீங்கள் பிறந்திருக்கிறீர்கள் என்பது சத்தியம். உலகமெல்லாம் புலனின்பத்தின் பின்னால் வெறித்தனமாகச் செல்வதை நீங்களும் பார்க்கத்தானே செய்கிறீர்கள்?

கல்யாணம் பண்ணிக் கொள்வதற்காகவே கடன்படுகிறார்கள். அந்தக் கடன் அடையும் முன்பே கண்ணை மூடிவிடுபவர்களும் இருக்கின்றனர். வீட்டை விடப்போவதாக எவராவது ஸ்ரீராமகிருஷ்ணரிடம் சொல்லும்போதெல்லாம் அவர், “உனக்கு அந்தரங்கமான நாட்டம் இருந்தால் சூழ்நிலை தானாகவே படிப்படியாக அனுகூலமாகி வருவதைக் காண்பாய்” என்றுதான் சொல்வாரேயன்றி, ஒருபோதும் ‘எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடி வந்துவிடு’ என்று சொல்லமாட்டார். ‘உனக்கு அந்தரங்க நாட்டம் இருந்தால்’ என்பதே அவரது வார்த்தை. ஏனெனில் அவருக்கு ஒவ்வொருவரது மனதினுள்ளும் இருப்பது தெரியும்.

உலகத்தில் சகல விஷயங்களிலும் இரண்டு அம்சங்கள் உண்டு. ஒன்று, உன் சொந்த விருப்பம்; மற்றொன்று, பகவானின் விருப்பம். ஆகவே சொந்த விருப்பத்தின் மீதான பிடிவாதத்தில் எந்த நடவடிக்கையும் எடுப்பது மிகவும் மனக் கோணலாகத்தான் முடியும். எல்லோருக்குள்ளும் இயக்குவிக்கும் தத்துவமாக இறைவன்தான் இருக்கிறார் என்பதும் வாஸ்தவந்தான்.

ஸ்ரீராமகிருஷ்ணர் காதல் வசப்பட்ட ஒரு பெண்ணின் கதையை உதாரணமாகச் சொல்லுவார்.

எப்போதும் காதலனைப் பற்றிய நினைவுடனேயே அவள் வீட்டுவேலைகள் யாவற்றையும் செய்வாள். அப்புறம் அவள் மனம் பரிபூர்ணமாக அவனிடமே திரும்பிவிடும்போது, வீட்டு உறவை முறித்து அவனிடமே ஓடிவிடுவாள். இது ஓர் அழகான உவமைக் கதை அல்லவா?

முதலில் ஒரு கையினால் லௌகிக வேலை செய்வதாகவும், மற்றொரு கையினால் ஈசுவர சேவை செய்வதாகவும் இரு. பிறகு உரிய காலம் வரும்போது அவனுக்கே இரு கைகளாலும் பணி புரியக்கூடியவனாக ஆவாய். உண்மை ஈடுபாடு இருப்பின் அந்தக் காலம் வந்தே தீரும்.

எண்ணமும் சொல்லும் ஒன்றுக்கொன்று மாறுபடாமல் வாழ வேண்டும். மனம் ஏற்காத ஒன்றை உதடு மட்டும் சொல்வதற்கு அனுமதிப்பதில் பிரயோஜனமில்லை. மனம் ஒன்றை நினைக்கும்போது உதடு அதையே வெளியிட வேண்டும். இதையே திருப்பியும் சொல்லலாம். உதட்டிலிருந்து ஒன்று வந்துவிட்டால் அதை எக்காலும் காரியத்தில் செய்தேயாக வேண்டும். இப்படி நடப்பவன், யாவும் தனக்குச் சாதகமாகவே உருவாவதைக் காண்பான்.

நேற்று, யாவும் பூர்வத்தில் விதித்த வழியே நடக்கிறது என்பதாக நீங்கள் சொன்னது அர்த்தமில்லாத பேச்சு. அப்படியாயின் இந்த உலகத்தில் ஏதுமே செய்வதற்கில்லை. நல்லது தீயது என்பனவும் இல்லாதவையாகின்றன. பூர்வம் விதித்த வண்ணமே நடப்பதென்பது, யாவற்றையும் பகவானிடமே விட்டுவிட்ட பூரண பக்தன் ஒருவன் விஷயத்தில்தான். அவன் யந்திரம் போலவே தானாகச் செயல் புரிகிறான். அவனுடைய சங்கல்பத்துக்கும் பகவத் சங்கல்பத்துக்கும் இடையில் பேதமே இல்லை.

இதற்கும் பரீக்ஷை உண்டு. அவனல் எந்தக் கெட்ட செயலும் செய்ய இயலாது. அவன் தவருக ஓர் அடியும் எடுத்து வைப்பதில்லை. ஒருவன் ஆத்மாவைத் தன் மனதினலேயே உயர்த்திக்கொள்ள வேண்டும்; ஒருபோதும் மனதைத் தாழ விடக் கூடாது.

“மனமே ஒருவனின் நண்பன்; அதுவே ஒருவனின் பகைவனும். எவனது மனம் ஞானத் திலும் ஆன்மானுபவத்திலும் நிறைவு காண் கிறதோ, எவன் எல்லாச் சூழலிலும் ஒரே போல் உள்ளானே, இந்திரியங்களைக் கட்டுப் படுத்தியிருக்கிருனே, மண்ணுங்கட்டியையும் கல்லையும் பொன்னையும் ஒன்ருகக் காண்கிருனே அவனே யோகி எனப்படுகிருன்” என்கிறது கீதை.

“அம்மா, இவர்களுக்கு ஞானப்பிரகாசம் ஏற்பட விடுவாய். இவர்கள் ஆத்மாவை உணர விடுவாய்” என்று ஜகன்மாதாவைப் பிரார்த் திப்பது தவிர ஸ்ரீராமகிருஷ்ணர் எவ்வித ஆசீர் வாதமும் கூறியதில்லை. அப்போது ராக்கால் மகராஜ் (சுவாமி பிரம்மானந்தர்) அவருடன் வசித்து வந்தார். மகராஜின் உறவினர்கள் தாம், அவரை குருமகராஜிடம் அழைத்து வந்தார்கள். ஆனல் அவர் (மகராஜ்) துறவு மேற்கொள்ள இருக்கிருர் என்பது அவர் களுக்குத் தெரிய வந்தபோது அது அவர் களுக்குப் பிடிக்கவில்லை. முதலில் அவர்கள் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் இதுபற்றிப் பேசினர்கள். அவர் அதை அதிகம் பொருட்படுத்தவில்லை.

அக்காலத்தில் ஸ்ரீராமகிருஷ்ணரது அடியார் களின் சௌகரியங்களை, சுரேஷ் பாபு (சுரேந்திர நாத் மித்ரர்) தமது பொருட்செலவில் கவனித்து வந்தார்.

ஒரு நாள் ஸ்ரீராமகிருஷ்ணரின் பக்தரும் ராக்கால் மகராஜின் உறவினருமான மனமோகன் அவரிடம், “ராக்கால் இங்கே வசிப்பது சுரேஷ் பாபுவுக்குப் பிடிக்கவில்லை” என்று சொன்னர். உடனே ஸ்ரீராமகிருஷ்ணர் கூறலானர் — என்னது? சுரேஷ் யார்? இங்கே அவருக்கு என்ன வைத்திருக்கிறது? இதோ பார், (சுரேஷ் படுத்திருந்த படுக்கை முதலான) இதையெல்லாம் தூக்கி எறி. இப்போதே அவற்றை எடுத்துப்போடு. (குரு மகராஜுக்கு எப்போதாவது சினம் மூண்டுவிட்டால் அத்தனை பேரும் பயந்து நடுநடுங்கிவிடுவோம். எவருக்கும் அவரருகில் போகவே துணிவு இராது.) இந்தப் பிள்ளைகளுக்கு (ராக்கால் முதலானவர்களுக்கு) ஆத்மசம்பந்தமான நல்ல குணப்பாங்குகள் இருப்பதனலேயே அவர்களை நான் என்னேடு வைத்துக்கொண்டிருக்கிறேன். அவர்கள் ஆத் மானுபவம் பெறுவதற்கு அருளுமாறு அம்பிகை யிடம் பிரார்த்திக்கிறேன். அவர்கள் முதலில் பகவத் சாட்சாத்காரம் பெற வேண்டும் என்பதே என் அபிப்பிராயம். அதுவரை அவர்கள் இங்கு இருக்க வேண்டும். அதன்பின் அவர்களது விருப்பப்படி எங்கு வேண்டு மானலும் இருக்கலாம்” என்று குருதேவர் கூறினர்.

இதைக் கேட்டதும் சுரேஷ் பாபு கண்ணில் நீர் வழிய குருதேவருடைய பாதத்தில் விழுந்து, தாம் அம்மாதிரி சொன்னதே இல்லை என்றும், இது முழுப் புரளி என்றும் கூறினர்.

இப்போது நீ கீழே கீழே போய்க்கொண்டிருக் கிருய் என்ருல் அதற்குக் காரணம் உலகத்தின் உண்மை இயல்பு உனக்குத் தெரியாததே. முதலில் உலகத்தைப் புரிந்துகொண்டு விட்டால், பிறகு அதிலேயே வாழ்ந்தாலும் அது உன்னைப் பந்தப்படுத்தாது.

உலகம் மெய்யாலுமே ஒரு தீமையா? எல்லாக் கஷ்டங்களுக்கும் வேர் உனக்கு உலகின் இயல்பு தெரியாததுதான். எவ்விடத்திற்குத் தப்பியோட முயல்கிருய்? இவ்விதம் செய் வதனல் நீ இரண்டு ஸ்டூல்களுக்கு மத்தியில் உட்கார்ந்திருப்பவனைப் போல் ஆகிருய். இரண்டு ஸ்டூல்களில் எந்த ஒன்றிலும் நன்கு பொருந்தி அமராமல், ஒரு பக்கம் ஒன்றின் விளிம்பிலும், மறுபக்கம் மற்ருென்றின் விளிம்பி லும் சிறிது சிறிது பட்டுக்கொண்டு சங்கட நிலையில் அமர்ந்திருப்பது போன்றதே உலகிலும் சேராமல், ஆத்மாவிலும் சேராமல், ஒன்றை விடவும் இன்னென்றைப் பிடிக்கவும் முயல்வது. இதனல் நீ பரமாத்மாவையும் பெறமாட்டாய், உலகத்தையும் பெறமாட்டாய்.

யோக வாசிஷ்டத்தில் நாம் படிக்கிருேம்: விச்வாமித்திரர் தசரதரிடம் வந்து ராமனை

யாசித்தார். அப்போது தசரதர் அவரிடம், "ராமன் நாளுக்கு நாள் இளைத்து வருகிறான். வைராக்கிய உணர்வு அவனைத் தீவிரமாகப் பற்றியுள்ளதென எண்ணுகிறேன். இந்த நிலையில் அரக்கருடன் போரிட அவனை எப்படித் தங்களோடு அனுப்புவது?" என்று கேட்டார். அவரது ராஜ ஆக்ஞைக்குப் படிந்து ராமர் சபைக்கு வந்து, அங்கிருந்தோரை வணங்கி அமர்ந்தார். விச்வாமித்திரர் அவரிடம், "நல்லது ராமா! உனக்கு வைராக்கியம் ஏற்பட்டுவிட்டதெனில் அசாதாரணமான இந்த வரப்பிரசாதத்தை நீ பெற்றுவிட்டதற்காக அனைவரும் மகிழவே வேண்டும். ஆனால் சொல். ஏன் தினந்தினமும் நீ மெலிந்து கொண்டு வருகிறாய்? ஏன் நாளுக்கு நாள் உற்சாகமிழந்து வருகிறாய்?" என்று கேட்டார்.

பிறகு ராமரின் மனதை ஆழ்ந்து பார்த்த விச்வாமித்திரர், வசிஷ்டரை நோக்கி, "இதோ பாருங்கள். முன்பு நாம் ஒருவரோடு ஒருவர் போரிட்ட பின்பு பிரம்மா நமக்கு அளித்த உபதேசத்தை இப்போது நீங்கள் ராமனுக்குப் போதியுங்கள். அவன் சத்திய சாட்சாத்காரம் பெற்று உலக வாழ்க்கையில் ஈடுபடட்டும்" என்றார்.

"தங்கமாக மாறிவிடுங்கள். அப்போது அசுத்தமான இடத்திலும் இருக்கலாம். எங்கிருந்தாலும் எப்போதும் தங்கமாகவே இருக்கலாம்" என்று ஸ்ரீராமகிருஷ்ணர் கூறுவார்.

உலகத்தில் வெற்றிகரமாக இருக்க முடியவில்லை என்பதற்காக மட்டும் அதை விட்டு விடுவது நல்லதல்ல. சில சமயங்களில் மக்கள் விழித்தெழுவது உடனேயே மறுபடியும் தூங்கி விழுவதற்குத்தான் என்று ஆகிறது. மெய்யாலும் தூங்குபவனை எழுப்பலாமே தவிரப் பொய்த் தூக்கம் போடுபவனைக் கிளப்புவது கடினம்.

பட்டினத்தாரும் பத்திரகிரியாரும்

பத்திரகிரியார் உஜ்ஜயினி நாட்டை ஆண்டு வந்தார். வடக்கு நோக்கிச் சென்ற பட்டினத்தடிகள் உஜ்ஜயினி நாட்டிலுள்ள காட்டில் பிள்ளையார் கோவிலில் தியானத்தில் ஆழ்ந்திருந்தார்.

அப்போது அரண்மனையில் கொள்ளையிடுவதற்காகத் திருடர் கூட்டமொன்று சென்றது. அந்தத் திருடர்கள் பட்டினத்தார் தியானத்திலிருந்த விநாயகர் கோவிலின் முன்னால் நின்று, "விநாயகனே! எங்களுக்குப் பொருள் கிடைத்தால் உனக்கு முத்தாரம் சாத்துகிறோம்" என்று கூறிவிட்டுச் சென்றார்கள்.

எதிர்பார்த்ததைப் போலவே திருடர்களுக்குக் கொள்ளையில் அன்றைத்தினம் பெரும் பொருள் கிடைத்தது. வேகமாகத் திரும்பி வந்தபோது திருடர்கள் தாங்கள் பிரார்த்தித்துக்கொண்டபடியே ஒரு முத்துமாலையை விநாயகர்மேல் வீசியெறிந்து சென்றுவிட்டனர். திருடர்கள் வீசிய முத்துமாலை பட்டினத்தடிகளின் கழுத்தில் விழுந்தது.

பட்டினத்தார் தியானம் கலைந்து வெளியே வந்தார். முத்துமாலையுடன் அவரைக் கண்ட அரண்மனைச் சேவகர்கள் அவரைத் திருடன் என்று நினைத்து அரசனிடம் இழுத்துச் சென்றார்கள்.

அரசராகிய பத்திரகிரியாரும் பட்டினத்தடிகளைத் திருடன் என்று முடிவு செய்து அவரைக் கழுவிலேற்றுமாறு உத்தரவிட்டுத் தாமும் உடன் சென்றார்.

பட்டினத்தார் இறைவனை நினைத்துக் கழுமரத்தை நோக்க, கழுமரம் எரிந்தது. அதைக் கண்ட பத்திரகிரியார் வியப்பும் அச்சமும் கொண்டார். பத்திரகிரியார் பட்டினத்தடிகளுக்கு அடிமை பூண்டு, சீடராக ஆனார். அவரும் துறவு பூண்டு, பட்டினத்தாருடன் சென்று, பிக்ஷை யெடுக்கத் தொடங்கினர். நாய் உருவம் கொண்டு அலைந்துகொண்டிருந்த ஒரு சிவயோகியும் பத்திரகிரியாரைத் தொடர ஆரம்பித்தார். பத்திரகிரியார் அந்த நாய்க்கும் உணவு அளித்து வந்தார்.

இருவரும் திருவிடைமருதூருக்கு வந்தார்கள். இறைவன் அடியார் உருக் கொண்டு பட்டினத்தாரிடம் வந்து பிக்ஷை கேட்டார். பட்டினத்தார், "மேலைக் கோபுரத்தில் பத்திரகிரி என்ற ஒரு சம்சாரி இருக்கிறான். அவனிடம் சென்று பிக்ஷை கேள்" என்றார்.

அடியார் உருவத்தில் வந்திருந்த இறைவன் பத்திரகிரியாரிடம் சென்று, பட்டினத்தார் சொன்னதைத் தெரிவித்துப் பிக்ஷை கேட்டார். பத்திரகிரியார், "ஆகா! இந்த ஓடும் நாயும் அல்லவா என்னைச் சம்சாரியாக்கி விட்டன!" என்று கூறி, இரண்டையும் துறந்துவிடும் எண்ணத்தில், ஓட்டை நாயின்மீது எறிந்தார்.

உடனே நாய் உயிர் நீங்கிக் காசிராஜன் மகளாகிப் பத்திரகிரியாரை அடைந்தது. பத்திரகிரியார் அந்தப் பெண்ணுடன் தம் குருவையடைந்து பணிந்தார். மூவரும் உட்சென்று சோதியைக் கண்டு பணிந்தார்கள். பத்திரகிரியாரும் அந்தப் பெண்ணும் சோதியுடன் கலந்தார்கள். பட்டினத்தார் இறையருளை எண்ணி வியக்கலானார்.

— திருவிடைமருதூர்த் தல வரலாறு

காந்தியடிகளின் பொன்மொழிகள்

* கடவுள் வரையறைகளுக்கு அடங்காதவர். நாம் அவரை உணருகிறோமே ஒழிய அறியவில்லை.

* உங்கள் இச்சைகள் உங்களை வெற்றி கொண்டுவிடும் போலத் தோன்றினால், முழந்தாளிட்டு ஆண்டவனின் உதவியைக் கோரிப் பிரார்த்தனை செய்வீர்களாக.

* பிரார்த்தனையானது காலையின் திறவுகோல்; மாலையின் தாழ்ப்பாள். பிரார்த்தனையின்போது இதயமில்லாத சொற்கள் படைத்திருப்பதைவிட, சொற்களில்லாத இதயம் படைத்திருப்பது மேலானது.

* பிரார்த்தனை மதத்தின் ஆத்மாவாகவும் சாரமாகவும் விளங்குகிறது என்று நான் நம்புகிறேன். அதனால் பிரார்த்தனை மனித வாழ்க்கையின் ஆதாரமாக விளங்க வேண்டும். பிரார்த்தனையின் மாய சக்தியை அனுபவித்தவன் நாட்கணக்கில் சாப்பாடில்லாமல் இருக்க முடியும். ஆனால் பிரார்த்தனையில்லாமல் ஒரு நிமிடம்கூட இருக்க இயலாது. பிரார்த்தனையின்றி மன நிம்மதியில்லை.

* நாம் கடவுளுக்காகவும், அவருடைய திட்டங்களையும் நிறைவேற்றி வைப்பதற்காகவும் பாடுபடுகிறோம். மரணம் என்பது தோற்றத்தோடு சரி. மரணமும் அழிவும் மாறுதல்களே தவிர வேறல்ல. ஓர் ஓவியன் இன்னும் நன்றாக வரைய வேண்டும் என்பதற்காக ஏற்கனவே தான் வரைந்த ஓவியத்தை அழித்து விடுகிறான். கடிகாரம் செய்பவன் நல்ல ஸ்பிரிங் போடுவதற்காக மோசமான ஸ்பிரிங்கைத் தூர எறிந்து விடுகிறான்.



பொன்மொழிகள்